

தென்மொழி

T. 5844

மெச்சும் பெரும்பணி!

தமிழுணர்வில்லாமல் தமிழரை இணைப்பது
உமியைப் பிசைந்தே உருண்டை பிடிப்பது!
தமிழரை இணைக்காமல் தமிழர்முன் னேற்றம்
அமையா தென்பதை அனைவரும் உணர்க!
இனத்தை ஒன்ருய் இணைப்பதே இங்குள
அனைத்துத் தமிழர்க்கும் அமைந்த பெரும்பண
மனத்தைப் பிளப்பன மதங்களும் சாதியும்!
இனத்தைச் சிதைப்பன இங்குள கட்சிகள்!
கட்சிகள், மதங்கள், சாதிகள் கழன்ற
மச்சிடும் நிலையே தமிழர்க்கு மேன்மையாம்!

சுவடி : 19 விலை

ஓலை : 8-4 உருபா 1-25



நமக்கு வந்த மடல்கள்.

0 : 952 : ஐயா அவர்கட்கு வணக்கம். தென்மொழியில், தென்மொழி அன்பர்கள் பயில வேண்டிய நூல்களை அறிமுகம் செய்து ஒரு பகுதியைத் தொடங்கினால் பயனுள்ளதாயிருக்கும் எனக் கருதினேன். தென்மொழி பயில்வோர்க்குக் கருத்துவளம் நல்கக் கூடிய நூல்களை இப்பகுதிக்குத் தேர்ந்து கொள்வது நலம் பயக்கும்.

நமக்கு உடன்பாடான கருத்துடையவை, மாறுபாடான கருத்துடையவை, உடன்பாடான கருத்துகள் சிலவும் மாறுபாடான கருத்துகள் சிலவும் உடையவை என மூன்று தகுதிகளின் கீழ், நாம் விரும்பும் நூல்களை அறிமுகம் செய்யலாம். இதை ஒரு "தேவை" (Must) எனக் கருதுகிறேன். இதழ்தோறும் ஒரு நூலை இவ்வகையில் அறிமுகம் செய்யலாம். இதற்காக அரைப்பக்கத்தை ஒதுக்கினாலே மிகுதி.

இவ்வகையில், "ஆர். எசு.எசு. ஓர் அபாயம்" என்ற தி. க. வெளியீடு முதலாவதாய் அறிமுகப்படுத்த வேண்டிய நூல் என்று கருதுகிறேன். இந் நூல் தமிழகத்து இளைஞர்கள் அனைவரும் படித்தறிய வேண்டிய செய்திக் களஞ்சியம். தமிழகத்தின் கண்ணைக் கொத்தும் கருநாகமாய் உள்ள ஆரிய மதவெறிக் கும்பலின் உண்மை உருவத்தைக் காட்ட, இதுவரை, இத்தகு ஒருநூல் தமிழில் வந்ததில்லை. அச்சிடமுடியாமல் விட்ட பகுதிகளையும் சேர்த்து இன்னும் விரிவுபடுத்தித், தென்னக மொழிகள் நான்கிலும் இதை வெளியிடுவதற்குத் திராவிடர்கழகத் தலைமை முன்வர வேண்டும். இது வரலாற்றுக்கே செய்யும் பெரும்பணியாக இருக்கும்.

அடுத்து, அண்மையில் வெளியான "கம்யூனிசம் விடுதலையின் இலக்கணம்" என்ற நாகராசனின் நூலும், முற்குறித்த மூன்றுந் தகுதியின் கீழ் அறிமுகப்படுத்தத்தக்க நூலாகும். எளிய படிப்பாளர்களுக்கும் புரியுமாறு பொதுவுடைமைக் கொள்கை இதில் திறம்பட விளக்கப்படுகிறது. நம்மால் மறுக்கப்படவேண்டிய கருத்துகளும் பல இதில் உள்ளன. இதுபோலும் நூல்கள் நம்மவரால் பயிலப்பட வேண்டியவை. எண்ணிப் பாருங்கள்.

— **இரணியன்**, கோவை-18.

(**ஆசிரியர் குறிப்பு :** தாங்களும் தங்களைப்போல் சிலரும் அப்பணியைச் செய்தால் தென்மொழி வரவேற்கும்.)

0 : 953 : அன்புள்ள, பாவலரேறு அய்யா அவர்களுக்கு, குடியேற்றம் நகர திராவிடர் கழகத் தலைவர் வி. சடகோபன் எழுதுவது, தங்களின் குடியேற்றம் வருகை மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. தங்கள் உரையைக் கேட்க வாய்ப்புக் கிடைத்ததை, வாழ்நாளில் பெரிய பேறாகக்கருதுகிறேன். குடியேற்றம் நகரில் விரைந்து 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' செயல்பட ஆவன செய்கிறோம். தங்களின் இன எழுச்சி உரையினைக் குடியேற்றம் மக்கள் அடிக்கடி கேட்கும் வாய்ப்பினை ஏற்படுத்துகிறோம்,

— **வி. சடகோபன்**, குடியேற்றம்.

பாவேந்தர் இலக்கியப் பேரவை

20, மேற்குத் தெரு
பவானி - 638 301. பெரியார் மாவட்டம்.

திருக்குறள் தொடர் சொற்பொழிவு அழைப்பிதழ்.

பேரன்புடையீர், வணக்கம்.

நிகழும் திருவள்ளுவராண்டு 2013 சிலை (மார்கழி)த் திங்கள் 9-ஆம் நாள் முதல் 18-ஆம் நாள் முடிய (24-12-82 முதல் 2-1-83 முடிய) எங்கள் பாவேந்தர் இலக்கியப் பேரவையின் சார்பில்

பவானி சுழற்கழகக் கூடத்தில் (ROTARYHALL)

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள்

(தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களின் பொறுப்பாசிரியர்)

திருக்குறள் தொடர்சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். அன்பர்கள் அனைவரும் வருகைதந்து சொற்பொழிவினைக் கேட்டுப் பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- சொற்பொழிவு தக்கார் தலைமையில் நாள்தோறும் மாலை 6.30 மணிக்குத் தொடங்கி இரவு 9.00 மணிவரை நடைபெறும்.
- சொற்பொழிவு முடிந்தவுடன் ஊர் திரும்ப நகரப் பொதுப் பேருந்து ஏந்து உண்டு.
- மிகத் தொலைவான இடங்களிலிருந்து வரும் அன்பர்கள் தங்கிக் கொள்வதற்கு மட்டும் இடஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்தகையோர் உடன் செயலருக்கு எழுதிப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

அறிஞர்கள் வருக! ஆசிரியப் பெருமக்கள் வருக!
அரசியல் கட்சியினர் அனைவரும் வருக!
எதுசெய்ய நாட்டுக்கு எனத் துடிக்கும் இளைஞர்களே வருக!
பேருலகின் கண்ணும் பெண்ணினமே வருக!
மதி வளர்த்திட மாணவர் வருக!

பவானி, இன்னணம்,

ஏன் இந்தத் திருக்குறள் தொடர் சொற்பொழிவு?

பேரன்பு கொண்டோரே! பெரியோரே!

பெற்ற தாய்மாரே! நல் இளஞ் சிங்கங்காள்!

திருக்குறள் தொடர்பொழிவு! ஆம் எத்தனையோ தொடர்சொற்பொழிவுகளைக் கேட்ட உங்கட்குத் திருக்குறள் தொடர்சொற்பொழிவைக் கேட்குப் புதுமையான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளோம். ஈராயிரம் ஆண்டுகளின் முன் தோன்றிய திருக்குறளின் அருமையையும் பெருமையையும் தமிழர்கள் இன்றுவரை உணரத் தவறிவிட்டார்கள்! திருக்குறள் காட்டும் தூய செந்நெறியில் ஒழுகவும் தவறிவிட்டார்கள். முன்னாளில் ஆண்ட முடியுடை மூவேந்தரும் திருக்குறளின் மாண்புணர்ந்து அதற்குரிய இடந்தந்து போற்றாமல், எதை எதையோ போற்றி இந்நாட்டு மக்களைப் பாமரராய், விலங்குகளாய் ஆக்கிவிட்டார்கள்! தமிழகம் வள்ளுவரின் குறள்நெறியைப் போற்றாமல், தனை அடிமைப்படுத்தும் அயல் நெறியை ஏற்றுப் போற்றியதாலேயே இன்று தாழ்நிலை உற்றது. தாழ்ந்த தமிழகத்தைத் தலை நிமிர்ந்து எழச்செய்யும் ஆற்றல் திருக்குறள் ஒன்றிற்குத்தான் உண்டு. மற்ற அயல் நெறி நூல்கள் தமிழனை மேலும் அடிமைப்படுத்தி அழித்து ஒழிக்குமே அன்றி அவனை அணுவளவும் வாழ்விக்க மாட்டா!

விழிப்புற்ற தமிழ்ச் சான்றோர் கொண்ட ஆர்வமே இன்று திருக்குறளின் மறுமலர்ச்சியாகவும், தமிழகத்தின் மறுமலர்ச்சியாகவும் திகழ்ந்திடக் காண்கிறோம். தமிழன் குருதியில்—உள்ளத்தில் கலந்துள்ள அயல்நெறி நஞ்சு அகலவும், தமிழன் உள்ளத்திலும் உயிரிலும் தமிழ்நெறி உணர்வு தழைக்கவும் தமிழனுகத் தரணி புகழ் வாழ்வு எய்தவும் **பாவேந்தர் இலக்கியப் பேரவையினராகிய** நாங்கள் இத்திருக்குறள் தொடர் சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்துள்ளோம்.

அறிஞர் குலம் போற்றும் பேரறிஞர் **ஆல்பர்ட்டு சுவைட்சர்** உள்ளிட்ட பலரும் போற்றிய ஒப்பற்ற நூல் திருக்குறள்! மாந்தனை மாந்தனாக வாழவைக்கும் மாமறை! இன்றையத் தமிழனின் துயரை மட்டுமன்றி உலக மக்களின் துயரையே மாற்றவல்ல மாமருந்து. சாதி, சமயச் சழக்குகளைப் போக்கி உலகோர் அனைவரையும் ஒரு குலமாக வாழவைக்கும் அருமறை!

இத்திருமறையின் அருமை உணர்ந்த மெய்யுணர்வாளரும், தன்னிகரில்லாத் தமிழ்ப் பெரும்புலவரும், தமிழின உயர்விற்கு உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் கண்ட முதல்வரும், நற்றமிழ் நாவலருமாக விளங்கும் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் திருக்குறள் தொடர் சொற்பொழிவு ஆற்ற உள்ளார்கள். தமிழ் நெஞ்சம் கொண்ட பெருமக்கள் அனைவரையும் குறளமுதம் பருக வருக! வருக! என மனம் கனிந்து அழைக்கின்றோம்.

'வள்ளுவத்தின் மாண்புணர்ந்து வாழ்விலென்றும் போற்றுவோம்!

திருக்குறள் தொடர் சொற்பொழிவு
நிகழ்முறை

1.	24-12 82 வெள்ளி	திருக்குறள் தோற்றத்திற்கான வரலாற்று அடிப்படையும், நூல் அமைப்பியல் விளக்கமும்
2.	25-12-82 காரி (சனி)	திருக்குறள் கூறும் வாழ்வியல் கூறுகள்
3.	26-12-82 ஞாயிறு	திருக்குறள் கூறும் அறம்
4.	27-12-82 திங்கள்	திருக்குறள் கூறும் இல்லற அமைப்பு
5.	28-12-82 செவ்வாய்	திருக்குறள் கூறும் மெய்ப் பொருளியல்
6.	29-12-82 அறிவன் (புதன்)	திருக்குறள் கூறும் அரசு
7.	30-12-82 வியாழன்	திருக்குறள் கூறும் அமைச்சு
8.	31-12-82 வெள்ளி	திருக்குறள் கூறும் குமுகாயம் (சமுதாயம்)
9.	1-1-83 காரி	திருக்குறள் கூறும் காமம்
10.	2-1-82 ஞாயிறு	திருக்குறள் கூறும் சமயம்; நிறைவு விழா.

தொடர்பு கொள்ள முகவரி:

செயலர்; புலவர். ப. ஆ. அரங்கநாதன் க.மு., கல்.மு

பாவேந்தர் இலக்கியப் பேரவை,

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம் :	8 ,,	18 ,,	18 ,,
தனியிதழ் :	1.25 ,,	3 ,,	3 ,,

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதி கேட்க!

"தமிழ்ச் சிட்டு"

சென்னை-5.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடுகள்
ஆண்டுக்கட்டணம் உருபா	6-00	13-00	13.00
தனியிதழ் ,,	0-50	1.25	1-25

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு ஓர் உருபா மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

'தமிழ் நிலம்'

உ. த. மு. க. கிழமை இதழ் — சென்னை-5

1.	தனியிதழ்	விலை உரு. 0. 65
2.	ஆண்டுக் கட்டணம்	உரு. 36. 00
3.	அரையாண்டுக் கட்டணம்	உரு. 18. 00

ஓரிதழுக்கு உரு. 4.00 மேனி முன்பணம் கட்டும் முகவர்கள் எழுதிக் கேட்க.

தொடர்புக்கு : தமிழ் நிலம், 5, அருணாசலத்தெரு, சென்னை-5.

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : **பெருஞ்சித்திரனார்**

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன் (சிங்கை),
தென்மொழிமறை. நித்தலின பனார், தென்மொழி ந. முத்துக் தமரனார்
தென்மொழி ப. துரையரசன், தென்மொழி. நா. இளமாறன்,
அமைச்சர் : அழ. இளமுருகன, அறி. இ.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 19] உ0கக துலை - நளி (அக் - திசம்பர்'82) [ஓலை-4

தேவையற்ற திட்டங்களும் நாட்டுச் சிதைவுகளும்!

'ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை' (463) என்று திருக்குறளில், **'தெரிந்து செயல் வகை'** அதிகாரத்துள் ஒரு கருத்தை முன்வைப்பார் திருவள்ளுவர். சில செயல்கள் ஆக்கத்தைக் கருதுவது போலிருக்கும்; ஆனால் முதலுக்குத்தான் கேடுவரும். அந்தச் செயல்களை **'ஊக்கார் அறிவுடையார்'** என்பார் அவர். அந்த வகையில் நம் தமிழக அரசும் சில திட்டங்களை அண்மைக் காலத்து அறிவித்துச் செயல்

படுத்தி வருகிறது. எடுத்துக் காட்டாக அதன் 'சார உணவுத்திட்டம்' 'பல்பொடி வழங்கும் திட்டம்' என்னும் இரண்டைச் சொல்லலாம். இவ்விரண்டு திட்டங்களுக்கும் அரசுச்சார்பில் ஏராளமான விளம்பரம் செய்யப் பெறுகிறது; ஆரவாரமான விழாக்கள் கொண்டாடப் பெறுகின்றன. இத் திட்டங்களால் மக்களுக்கு என்ன பயன்கள் விளைந்து விடப்போகின்றன என்பதை ஆழமாகவும் நடுநிலையாகவும் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது 'சார உணவு (சத்துணவு) வழங்கும் திட்டம்' நல்ல திட்டமாகவே படும். நாட்டின் 60 ஆயிரம் ஏழைக்குழந்தைகள் சார உணவுத்திட்டத்தால் பயன்பெறுகிறார்கள்; குழந்தைகள் முன்னினும் மிகுதியாகப் பள்ளிக்கு வருகிறார்கள்; என்றெல்லாம் இத்திட்டம் பற்றி மிகுவாகப் பேசப்பெறுகிறது. ஆண்டொன்றுக்கு 120 கோடி உருபா இத்திட்டத்திற்கென அரசு செலவழிக்கிறது. செல்வர்கள் பலர் இதற்கு நன்கொடைகளை வாரி வழங்குகிறார்கள் என்றும் விளம்பரப்படுத்தப் பெறுகிறது. அண்டை அயல் மாநிலங்களும், வெளிநாட்டில் உள்ளவர்களும் கூட இத்திட்டத்தை மிகுவாகப் பாராட்டுகின்றனர், என்றும் கூறப்பெறுகிறது. நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டும். இத் திட்டத்தால் கிடைக்கும் பயன்கள் யாவை? அப்படியே நன்மை கிடைப்பதானாலும், அந்நன்மை நிலையான நன்மையாக இருக்க முடியுமா என்பவை பற்றிச் சிறிது ஆராயவேண்டும்.

முதலில், ஒரு திட்டத்தால் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. இந்தச் சார உணவுத்திட்டத்தால் கிடைக்கும் நன்மைகளைவிட, குழந்தைகளுக்கு ஏற்படும் மனவியல், வாழ்வியல் தீங்கே மிகுதியானது. குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பது, அவர்களின் எதிர்கால வாழ்க்கை அடிப்படைக்கே ஆகும். அத்துடன் அவற்றிடம் நம்பிக்கை, தன்முயற்சி, மனஊக்கம், ஒழுக்கம் முதலிய மனவியல் நன்மைகளையும் கல்வி அவர்களுக்குத் தருகிறது. இந்தச் சார உணவுத்திட்டம் அவர்களுக்குத் தற்காலிக நன்மையைத் தந்து, எதிர்கால மனவியல் பயன்களை அவர்களிடம் தோன்றாமல் செய்து விடவில்லையா? அதை ஏன் அரசு சிந்திக்கவில்லை.

வளரும் குழந்தைகள் பள்ளிக் கூடங்களில் தட்டுகளைத் தூக்கிக் கொண்டு, உணவுக்காக ஏங்கி நிற்பது, அவர்களின் எதிர்காலத்தை நம்பிக்கையற்றதாக்கிவிடவில்லையா? அவர்களின் தன்முயற்சி, ஊக்கம், ஒழுக்கம் இவற்றை இத்திட்டம் தகர்த்துவிடாதா? சோறு வாங்கி உண்டு வளர்ந்த குழந்தைகளுக்குத் தன்முயற்சியும், ஊக்கமும் எப்படி வரும். அக் குழந்தைகள் பெரியவர்களானதும், அவ்வழக்கம் அவர்களை மேலும் இலவயமாகவே சோறு பெறும் உணர்ச்சிக்குத் கொண்டு போய் விடாதா? அப்பொழுது ஒழுக்கம் எப்படித் தங்கும்? உழைப்புச் செய்யாமல் உண்ண விரும்புகின்ற

உணர்வு வளர்ந்தால், அவர்கள் திருடத்தானே செய்வர்? திருட்டுக்குத் தடை வருகிறபொழுது, அவர்கள் கொள்ளை, கொலை முதலிய தீய செயல்களில், குமுகாய ஒழுங்குக்கு மாறுபட்ட செயல்களில் ஈடுபடத்தானே முயலுவர்? அந்நிலை எதிர்காலத்தில் எத்துணை இடர்ப்பாடுகளுக்கு வழிவகுக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாவா?

அரசே சோறு போடுவது நல்ல திட்டமா? அது, மக்களிடையே இளமையிலேயே சோம்பலை வளர்த்துத் தன்முயற்சியைக் குன்றச் செய்து, அறிவு நாட்டத்தைக் குறைத்துவிட வழி வகுக்காதா? சோறு போடுவதா அரசின் வேலை? சோற்றுக்கு வழி செய்வது தானே அரசின் முயற்சியாக இருத்தல் வேண்டும். மக்களுக்குக் கல்வியையும், அறிவையும் வளரச் செய்வதும், தன்முயற்சியையும், நேர்மையான உழைப்பால் பயன்பெறும் உணர்வையும் கற்பிப்பதுந் தாமே அரசுடைய முயற்சியாக அமைதல் வேண்டும். இந்நிலைக்கு ஏழை மக்கள் முன்வராத பொழுது, அவர்களுக்குக் கல்விச் சலுகைகளையும் உதவிகளையும் கொடுத்து, அவர்களை ஊக்கப்படுத்துவதை விட்டு விட்டு, அவர்களுக்குச் சோறு போடுவது கல்வியின் இன்றியமையாமையைக் குறைப்பதாக ஆகிவிடாதா? மேலும் இத்திட்டத்தால் உண்மையிலேயே கல்வியின் முகாமை குறைந்து போக வில்லையா? கல்விக் கூடங்களைச் சோற்றுக் கூடங்களாகவும், கல்வி தரும் ஆசிரியர்களைச் சோறு பரிமாறுகிறவர்களாகவும் ஆக்குவது, கல்வியமைப்பையே சிதைக்கின்ற மூடச் செயலாகப் படாமற் போனது, எப்படி?

மக்களைக் கல்வித் தகுதியிலும், தொழில் தகுதியிலும் மேம்பாடுறச் செய்யும் திட்டங்களே மக்களுக்கு உதவுகிற நல்ல திட்டங்கள். மற்றபடி அவர்களின் வாழ்வியல் தேவைகளை நலன்களை அவர்களாகவே தேடிப் பெற்றுக்கொள்ளுகின்ற முயற்சியே, ஒரு நாட்டு மக்களைத் தகுதியுடைய குடிமக்களாக ஆக்க உதவும். குழந்தைகளுக்குச் சோறு போடுவது நல்ல திட்டமானால், மக்களுக்குச் சோறு போடுவது அதைவிட நல்ல திட்டமாகத்தானே இருக்க முடியும்? அதைச் செயற்படுத்த அரசு முனையாதது ஏன்? இஃதென்ன முன்னுக்குப் பின் முரண்பட்ட, குழப்பமான திட்டம். இது போலும் செயல்களைத்தாம் திருவள்ளுவர் 'ஆக்கங் கருதி முதலிழக்கும் செய்வினை' என்று குறிப்பிடுவார்.

மக்களுடைய ஆக்கம் உழைப்பே! சோறன்று; செல்வமும் அன்று! ஆக்கம் கருதிய செயல்களை ஊக்குவிப்பதே அரசினுடைய வேலை. அந்தச் செயல்களால் அவர்கள் தாங்களாகவே முயன்று செல்வத்தையும், வாழ்வியல் நலன்களையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். மக்களின் ஊக்கத்தையும் உழைப்பையும் கெடுக்குமளவிற்கு, அவற்றை அவர்கள் உதறித் தள்ளுமளவிற்கு அரசு

திட்டங்களைத் தீட்டக்கூடாது. ஏற்கனவே கலைகள், விழா, வேடிக்கைகள், விளையாட்டுக் கொண்டாட்டங்கள், பரிசுப்பேராசைகள் முதலிய மக்களின் உழைப்பையும் ஊக்கத்தையும், தன்முயற்சியையும் கெடுக்கும் பற்பல வீணான திட்டங்கள் அரசால் கொணரப் பெற்று, நடந்து வந்து, அவற்றால் பலவகையான நாட்டுச் சிதைவுகள் ஏற்பட்டு, மக்கள் அறியாமையிலும், போலி ஆரவார வீண் வேலைகளிலும், குற்றச் செயல்களிலும், பேராசை முயற்சிகளிலும் ஈடுபட்டுத் துன்புற்று வருகின்றனர். குழப்பத்தின் மேல் குழப்பமாக அரசினது ஊட்ட உணவுத்திட்டம், 120 கோடி உருபாச் செலவில், அறிமுகப்படுத்தப்பட்டுத் தாறுமாறாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது, மிகவும் கொடுமையாகும்.

இது போதாதென்று, குழந்தைகளுக்கு இலவயமாகப் பல்பொடி வழங்கும் திட்டம் பகடிக் கூத்தாக அறிமுகப்படுத்தப் பட்டுப் பல்லிளிப்புக் காட்டி வருகிறது! இஃதென்ன கோமாளித்தனமான அரசியல் போக்கு! இத்திட்டங்களுக்கெல்லாம் மூளையாக இருப்பது யார்? அஃது எவருடைய மூளையாக இருந்தாலும் அது சலவை செய்யப்பட்டதாக வேண்டும். இல்லையென்றால் எதிர்காலத்தில் மக்களெல்லாம் மூளையுள்ளவர்களாகவே இருக்கமாட்டார்கள்? மூளை கொழுப்பாக மாறி அவர்களின் உடல் முழுதும் பரவி, திமிர் பிடித்த கொடுமைக்காரர்களாகவே இருப்பார்கள். அப்பொழுது, இக்கால் தமிழ்நாட்டை, ஆண்டு அரசு செலுத்தி வரும் முதலமைச்சரும், அவர் பரிவாரங்களும் இருக்க மாட்டார்கள்' அவர்களின் இழிந்த வரலாறுதான் இருக்கும்! இதில் யாருக்கும் ஐயம் வேண்டாம்!

— **பெருஞ்சித்திரனார்.**

ஆண்டாள், திருமாறன் அவர்களின் அருங் கொடை!

தொடக்க நாளிலிருந்து இன்றுவரை, தென்மொழி வளர்ச்சிக்குத் தோன்றாத் துணையாகவும், நம் செயல் திட்டங்களுக்குரிய ஊக்கக் கருத்தாளர்களில் ஒருவராகவும், தம் குடும்பத்தையே தமிழ்த் தொண்டில் ஈடுபடுத்திய பேராளராகவும் உள்ள நெய்வேலி, திருத்தகையர் **ஆண்டாள் திருமாறன்** இணையர், நல்லதோர் இலவம் பஞ்சு மெத்தையையும், இரு தலையணைகளையும் அன்பளிப்பாகத் தந்து பெருமை பெற்றனர். அவர்களும் அவர் குடும்பத்தாரும் நீடுழி வாழ்ந்து பெருமை பெற நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறோம்.

ஆண்டாள் திருமாறன் அன்போடு நாம்துயில
ஈண்டோர் படுக்கை இரண்டு தலையணைகள்
மெல்லிலவம் பஞ்சில் உவந்தளித்து மேன்மையுற்றார்!
சொல்லுண்டோ நன்றிசொல்லும் சொல்!

— **பெருஞ்சித்திரனார்**

நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு : ருங

ஆற்றிலம் என்றே அழுங்கினர் சான்றோர் !
நோற்றிலம் என்றே நொந்தனர் முதியோர்!
பெற்றிலம் என்றே ஆடவர் புலம்பினர்!
தாயர் ஆகிலம் என்றனர் தாயர்!
உடப்பிறந் திலமே என்மார் இளையோர்!
படற்கிலம் நோக்கெனப் பாவையர் கலங்கினர்!
முந்தினம் அலமென நைந்தனர் உழையோர்!
பிந்தினம் அலமெனக் காவலர் பிதற்றினர்!
முதிராச் சிறுமொழி முனிந்து முத்தமிழ்க்
கதிரெரி எஃகம் அணிமுன் னின்று
மறல்கொடு நெஞ்சின் மாமகன்
விறல்பெறத் தாங்கி வீழ்ந்த ஞான்றே!

பொழிப்புரை :

(இத்தகு வீறு பொருந்திய மறச்செயலை நாம் நம் வாணாளில்) ஆற்றிலமே என்று உள்ளம் வருந்தினர் நன்று எண்ணி நல்லனவே செய்யும் அறிஞர்; (இதுபோலும் வீரனை நாம் மகனைப் பெறுதற்கு நாம் நோன்பு) நோற்றதிலமே என்று எண்ணி நோகலுற்றனர், முதியவர்கள்; (இவனையொத்த ஓர் ஆண்மகனை யாம் பெற்றிருக்க வில்லையே என்று) ஆடவர்கள் வாயரற்றிப் புலம்பினர்; (இவனையொத்த ஒரு மறவனுக்கு) நாம் தாயராக வில்லையே என்று கூறினர், தாய்மார் பலர்; (இவன் போலும் ஒருவனொடும்) நாம் ஒரு வயிற்றில் பிறக்கவில்லையே என்று இளைஞர்கள் உரைத்தனர்: (இவனைப்போலும் ஒருவனின்) கண்களில் நாம் படவும் காதலுறவுந் வாய்ப்பிலையே என்று இளநங்கையர் மனம் வருந்தினர்; (இவன் செய்ததுபோலும் ஒரு மறச் செயலைச் செய்தற்கு நாம்) முந்திக் கொண்டோம் இலமே என்று இவன் நண்பர்கள் உள்ளம் துயருற்றனர்; (ஐயகோ, நம் வேட்டெஃகத்தால் வெடியுண்டு இவன் மாய்ந்திடாதவாறு), நாம் நம் செயலில் சிறிது பிந்திக்கொண்டோம் இலையே என்று (இவனைச் சுட்ட) காவலர் மாறுமொழி கூறி வாய் பிதற்றினர்; அண்மையில் தோன்றி, இலக்கண இலக்கியங்களால் முற்றி முதிர்ச்சியுறாத சிறுமை மொழியாகிய **இந்தி**யை — அதன் திணிப்பைப்--பொறுத்துக் கொள்ளாமல், சினங்கொண்டு, முத்தமிழ் நலனுக்காக, தீக்கதிர்களை உமிழ்கின்ற வேட்டெஃகம் (துமுக்கிகள்) சூழ வைத்த காவலர்களின் முன்னர் அஞ்சாமல் எதிரேறி நின்று, வீரங்கொண்ட நெஞ்சை யுடைய பெருமகனாகிய அரசேந்திரன் என்னும் மாணவன் தான்

கொண்ட கொள்கை வெற்றி பெறும்படி, தன்மேல் வந்து தாக்கிய எஃகுக் குண்டுகளைத் தாங்கி, அதனால் உயிர் பிரிந்து வீழ்ந்த அந்தப் பொழுதிலே!

விரிப்பு :

இப் பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

மூதிராச் சிறுமொழி இந்தி முனிந்து, முத்தமிழ் காக்க முன்னின்று, வேட்டெஃகம் தாக்கி வீழ்ந்த, அண்ணாமலைப் பல்கலைக் கழக அரசேந்திரனைப் பாடியது, இது.

இந்தியெதிர்ப்பில் உயிர்நீத்த அரசேந்திரனையும் அவன் வீரச் செயலையும், கேட்டபொழுது, சான்றோரும், முதியோரும், ஆடவரும், அன்னையரும், இளையோரும், பாவையரும், உழையோரும், காவலரும் அழுங்கலாகவும், ஆற்றிலராகவும், இரங்கலாகவும் என்னென்ன கூறி வருந்தினர் எனபதை இப பாடல் தெரிவிக்கின்றது.

இத்தகு விறமிக்க ஒரு விரம் பொருந்திய செயலை நாம் நம் வாழ்நாட்கண் செய்ததில்லையே' என்று சான்றோர் ஆற்றாமையால் வருந்தினர்.

முதியவர்கள் 'இத்தகைய வீரன் ஒருவனை நாம் மகனாகப் பெறு தற்குத் தவம் செய்ய வில்லையே' என்று மனம் நொந்து கூறினர்.

'இவன் போலும் ஓர் ஆண்மகனை நாம் பெறாமற் போனமே' என்று ஆடவர்கள் புலம்பிக் கொண்டனர்.

'இத்தகைய வீரன் ஒருவனுக்கு நாம் தாயராக வில்லையே' என்று அன்னைமார் மனம் வருந்தினர்.

'இன்னவன் ஒருவனுடன் நாம் உடன் பிறந்திலமே' என்று இளைஞர்கள் வருந்தினர்.

'இவனைக் காதல் செய்யும் வாய்ப்பு நமக்குக் கிட்டிலையே; என்று கன்னிப் பெண்கள் கலங்கினர்.

'இவனுடன் தோழர்களாக நாம் இருந்தும், இவ் வீரச்செயலுக்கு நாம் முந்திக் கொள்ள வில்லையே' என்று அவன் தோழன்மார் நெஞ்சம் நைந்தனர்.

'ஐயகோ, இத்தகு ஒரு மறவனை நாம் கொன்றுவிட்டோமே! நாம் சற்று பிந்தி வெந்திராமற் போனோமே! அக்கால் இவன் அடிபட்டுச் சாகாமல் இருக்க வாய்ப்பேற்பட்டிருக்குமே! என்று காவலர்களும் பலவாறு பித்துப் பிடித்தவர் போலும் வாயரற்றிக் கொண்டனர்.

— இவ்வாறு பலரும், அவ் வீரமகனாகிய அரசேந்திரன், இந்தி மொழிப் போரில் குண்டடிபட்டு உயிர் துறந்தபொழுது, பலவாறாக

எண்ணி, உரைத்துத் தம் வருத்தத்தைத் தீர்த்துக் கொண்டனர் என்றவாறு என்க.

ஆற்றிலம்—ஆற்றி இலம் என்னும் சொற்கள் புணர்ச்சியில் இடைக் குறைந்து நின்றன. ஆற்றுதல் நன்குற்றுதல் — நல்லது செய்தல்.

அழுங்கினர்—வருந்தினர். நெஞ்சுள் வருந்துதல்.

சான்றோர்—சான்றுகி நிற்பவர். பிறர்க்கு எடுத்துக் காட்டாகி நிற்கும் பெருந்தகையாளர்.

நோற்றிலம்—நோற்று இலம்—நோன்பு செய்திலம். முதியோர் நொந்தனர் என்றிருத்தலின், முதுமையில் கடந்த காலத்திற்கு வருந்துதல் என்க.

பெற்றிலம்—பெற்று இலம்—பெற்றிருத்தல் இல்லேம். பெறற்குக் காரணமாயினர் அவராகலின் ஆடவர் புலம்பினர் ஆயினர்.

தாயர் ஆகிலம் ......தாயர் : வெறுமனே தாயர் ஆகிலம் எனின், தாய்ப்பேறே வாயாதவர் என்றுதமாகலின், அஃதில்லாமை குறிக்கத் தாயர் என்று தம் பேறு குறித்தனர் என்க.

உடப் பிறந்திலம் : உடன் பிறந்திலம் என்பன வலித்துப் புணர்ந்தன.

படற்கிலம் நோக்கு : நோக்கில் படுதற்கு இலம்.

கலங்குதல் : மனமும் கண்ணும் ஒருசேரக் கலங்கி வருந்துதல்.

உழையோர் : பாங்குளார். நண்பர்.

பிந்தினம்......பிதற்றினர் : பிந்திஞேம் அல்லம் எனல் நிகழ்ச்சி நடந்த பினனைக் கூறுதலாகலின் பிதற்றுதல் ஆனது.

முதிராச் சிறுமொழி : வளர்ச்சியுறுத சிறிய பயன்தரும் இந்தி மொழி.

முனிந்து : அதன் புகுதலைக் கடிந்து வெறுத்து.

முத்தமிழ்க்கு அதிர் எரி எஃகம் அனி முன் நின்று: முத்தமிழ் காத்தலின் பொருட்டு, அதிர்கின்ற ஒலியுடன் எரியுமிழ்கின்ற வேட்டுக் குழல் தாங்கிய அணியினர் முன்னே துணிந்து நின்று.

மறல் கொடு நெஞ்சின் மாமகன் : வீரம் கொண்ட நெஞ்சுடைய பெருமை மிக்கவன்.

விறல் பெறத் தாங்கி : வெற்றி பெறும்படி நெஞ்சில் ஏற்று.

வீழ்ந்த ஞான்று : உயிர் கழன்று விழுந்த பொழுது.

முடிப் பொருள் ஒன்றின் முந்தைய வடிவம்!

சொல்லாய்வறிஞர் —ப. அருளி

இயற்கையொடு இயைந்த வாழ்க்கை, படிப்படியே குலைந்து நாகரிகப் புன்மை படர்ந்த போலிமை வாழ்க்கையாகப் படரப்படர இக்கால ஆண்களும் பெண்களும் பேரளவுக்கு உள்வலிவற்று, மேற்புறம் மட்டும் மினுக்கி நிற்பது அனைவரும் பரவலாக அறிந்த செய்தி! பண்டைய உடலுரம் இன்றில்லை! செயற்கை படிந்த வாழ்க்கை நடைமுறைகளால் அது படிப்படியே அச்சுக் கழன்று வருகின்றது! இன்றைய இளைஞர்களின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகையில், "திமிலெனத் தோற்றம்! ஆனால், தென்பில்லை; ஊற்றமில்லை!" என, ஐயா பாவலரேறு அவர்கள் மிகமிக அழகாக ஓரிடத்தில் கோடிட்டுக் காட்டுவார்கள்!

குறிஞ்சிப்பாட்டு, நற்றிணை, குறுந்தொகை முதலியவற்றில் வரும் அஞ்சில் ஓதி (அழகிய சிலவாகிய கூந்தல்) என்னும் வழக்குகளும், அகநானூற்றில் மட்டும் பத்து இடங்களில் பயிலப்பெறும் 'ஐம்பால் வகுத்த கூந்தல்' என்னும் வழக்குகளும், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்தைய நம் தமிழ்ப் பெண்டிர், தம் கூந்தலை ஐந்து வகைப்படப் பிரித்துப் பின்னிப் புனைவு செய்து கொண்டிருந்த காட்சியை நமக்குக் காட்டுகின்றன! அவர்கள் ஐந்து வகையாகப் பின்னுவதற்கு ஏற்றாற்போல அவ்வளவு திரட்சியுடையதாக, இயற்கையாக முடி தழைத்து நின்ற உண்மை நமக்குப் புலப்படுகின்றது!

இன்றைக்குள்ள பெண்டிரிற் பலர், '**டோபா**' என்னும் பெயருடைய, மொட்டையாக மழிக்கையில் உதிர்ந்த அல்லது ஒன்றொன்றாக உதிர்ந்ததைக் காத்துவைத்துச் சேர்த்துக் கட்டிய மயிர்க்கற்றையைத் தம் மண்டைத் தலையில் ஒட்டியுள்ள குறுமடிக் கற்றையுடன் சேர்த்துத் தம்மைப் புனைவு செய்து கொள்வது அனைவரும் அறிந்தவொன்று! (நீள முடி வளராத சில பெண்கள்

(முன் பக்கத் தொடர்ச்சி)

இப்பாடல், 1965-இல் தமிழகத்தில் நடந்த இந்திமொழித் திணிப்பை எதிர்த்தெழுந்த போரில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அரசேந்திரன் என்னும் மாணவன் காவலர் சூட்டைத் தாங்கி மடிந்தபொழுது, அவன் வீரப் பிறப்பைப் பலரும் பாராட்டியுரைத்ததைக் கேட்டுப் பாடியது.

இது, **செந்தமிழ்த் தும்பை** என் திணையும், **மொழிமறம்** என் துறையும் என்க. திணையும் துறையும் புதியன. O

நாகரிக வண்ணத்தில் குறக்கமாக (Popple; Pop) மேலைநிலை யொற்றிக் குறுகத் தறித்துக் கொள்ளவும் செய்கின்றனர்!

பண்டைய தமிழ்ப் பெண்டிரிடம், மயிர்க் கற்றையைச் செருகிப் புனைந்து கொள்ளும் பழக்கமேயில்லை! தேவையே படாதிருந்தது! முடிக் குறையும் இல்லை, எனவே முடி மறைக்கவும் தேவையில்லா திருந்தது.

குதிரைக்கு அழகு தருவது அதன் நடை! நடைச் சிறப்புடையது என்ற காரண அடிப்படையிலேயே அது **'பரி'** என்னும் பெயரையும் பெற்றது என்பது, மொழியியல் வரலாறு காட்டும் ஓர் உண்மை! அந்த நடை அழகு பெற்றமைக்கும் ஒரு சிறந்த துணையாக, அதன் பிடரி மயிர் இயற்கையூட்டத்தால் விரிந்து கிடந்ததும் ஓர் அடிப்படை யாகும்! குதிரையின கதி விரைவின போது, அந்தப பிடரி மயிரின் அலைவும், குலுக்கமும் அவ்வளவு அழகு தரும்! பார்ப்போர்க்கு அவ்வ ளவு ஈர்ப்பை உறுக்கும்!

பிடரி மயிரை அக்காலத்தில் 'உளை' என்றனர். (உலை > உளை = உலைவுறுவதாகிய பிடரி மயிர்). பரியுடை நன்மான் பொங்கு உளை (ஐங்குறு: 13: 11) விரியுளைப் பொலிந்த வீங்கு செலல் கலிமா (நற்றிணை:121:೭), விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான் (அகம்: 125:6) போன்றவாறாக வரும், கழக இலக்கியச் சான்றுகள் அவற் றின் அழகுப் பதிவுடைய இடத்தை ஒருமுகமாகச் சுட்டும் குறிப்பு களாகும்! பின்னர், 'உளை' என்பது, 'தலையாட்டம்' என்னும் செயற் கைப் புனைவுப் பொருளையும் குறிக்கலானது.

அந்தப் பிடரி மயிரும் போதாதென்று, மேலும் மயிர்க்கற்றைகளை அதன் தலைமுடியில் கட்டி, ஓட்டிவிட்டிருக்கின்றனர்! அப்படிக் குதிரைத் தலையில் இட்ட மயிர்க் கற்றை 'இடுமயிர்' என்னப் பெற்றது! 'கொடி படி சுவல **இடுமயிர்**ப் புரவியும்' எனவரும் மதுரைக் காஞ்சி அடியும் (391), 'புரவிச் சூட்டு மூட்டுஉறு கவரி' எனவரும் அகநானூற்று வரிகளும் (156: 1-2) இந்த உண்மையைச் சிறக்கச் சுட்டும் சான்று களாகும். (மேலும் காண்க:- 'ஒங்கல் மதிலுள் ஒரு தனிமா —ஞாங் கர், மயிரணியப் பொங்கி மழைபோன்று மாற்றார் உயிருணியவோடி வரும்' (புறப் பொருள் வெண்பா: 90:2-4)

குதிரைத் தலையில் கட்டப்பெறும் மயிர்க்கற்றையாகிய இடுமயிர் போன்று, தமிழப் பெண்டிரும், தம் தலைமுடிக் கற்றையொடு பிணையப் புனைந்த அல்லது இட்ட மயிர்க்கற்றையும் 'இடுமயிர்' என்னப் பெற் றது. **'இடுமயிர்'** பின்னர் **'இடிமயிர்'** என்றவாறு வழக்காறு கொண்டது.

'இடுமயிர்' என்பது **'இடிமயிர்'** என்றவாறு திரிபுற்றமை, உயிரிசைவு மாற்றத்தால் (Harmonic sequence of vowels) நிகழ்ந்ததாகும். 'மயிர்' என்னும் சொல்லில் நடுவுயர்ந்து எழுந்து நிற்கும் இகர

உயிரொலியின் மேலோக்கம், இடு என்னும் வினைச் சொல்லின் உகர வீற்று உயிரொலியைத் திசைத்துத் தம்மினமாக்கிக் கொண்டது! இந்தத் திரிபு, நேரிய ஒலியியல் திரிபொழுங்கு உடையதேயாகும்! 'இடிமயிர்' என்பதையும் செப்பவடிவமாகவே வழங்கலாம்! (மய் = கருமை, மய் + இர் = மயிர் = கரியதாகிய முடி. மய் + இல் = மயில் = கரிய தோகை சிறந்த பறவை வகை.)

இடிமயிர் வைத்துப் புனைந்து கொள்ளும் வழக்கம், ஆரிய நாகரிகப் போக்குடையதாகவே தெரிகின்றது. ஆரிய இனத்தவரின் பெண்டிர், இடிமயிர் வைத்துப் பின்னிக் கொண்டமை பெருமையுடையதாக அவர்களால் கருதப் பெற்றது என்பதற்கு, அவர்கள், 'இடிமயிர் அதாவது 'துணைமயிர்' வைத்துப் பின்னிக் கொண்டவர்கள் என்பதைச் சிறக்கவும் மதிக்கவும் குறித்துக் கொள்ளும் 'உபகேசி' என்ற சமற்கிருதச்சொல்லே துலக்கிக் காட்டுகின்றது. (Skr: upa = together with. Kesa = the hair of the head).

கண்ணனின் மனையாட்டியருள் ஒருத்திக்கு, (நப்பின்னை என்பாளுக்கு) உபகேசி என்பதுவும் ஒரு பெயர். நல்கூர் வேள்வியா என்பார் 'உபகேசி தோள் மணந்தான்' என்றவாறு திருவள்ளுவமாலையுள் (21) கண்ணனைச் சுட்டுவார். குதிரைக்கு இட்ட 'இடுமயிரை, சமற்கிருதவாணர் 'கேசார' (Kesara) (கேசரி) என்ற சொல்லால் குறித்து வைத்தனர். அழகிய முடியை உடையவன் என்னும் பொருளில் வரும் 'கேசவ' என்னும் சமற்கிருதச் சொல்லாட்சியும் கவனிக்கத் தக்கது. ('கேச') என்னும் சமற்கிருதச் சொல்லும் தமிழ் மூலத்தினின்று முனைத்ததே என்பது, பிறிதொரு கட்டுரையில் விளக்கப் பெறும்.

குதிரைக்கு அமைந்த பிடரி மயிரின் சிறப்பு, அரிமாவுக்கும் உண்டு! உளைமான் என்பது அரிமாவையும் குறிக்கும். [உளைமான் துப்பின் (அகம்: 102:1) உரை: அரிமாப் போலும் வலியினனும்....] 'மடங்கல்' என்னும் அரிமாவுக்குரிய சிறப்புப் பெயருள் ஒன்று, அதன் மடங்கித் தாழ்ந்து தொங்கும் பிடரிமயிரின் அமைவு பற்றியதேயாகும். குதிரையின் பிடரி மயிர் விரிந்தும் பொங்கியும் நிமிர்ந்தும் சிலிர்த்து நிற்க, இதன் பிடரி மயிர் அகன்றும் தொங்கியும் அமைந்திருக்கும். அரிமாவின் அகன்ற பிடரியின் சிறப்பை 'வியலுளை அரிமான்' எனப் பதிற்றுப்பத்து (18:15) சுட்டும்.

இதன் அடிப்படையிலேயே, சமற்கிருதவாணரும் அரிமாவைக் 'கேசரி' என்பர். அதை அடியொட்டியே, கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த சோழமரபினரான குமாராங்குசன், அவன் மகன் விசயாலயன் ஆகியோர் தொடக்கமாக, 'இராசகேசரி', 'பரகேசரி' என்றவாறான இரு பட்டங்கள் மாறி மாறிப் புனைந்து கொள்ளப் பெற்றன! O

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்
திருக்குறள் தொடர் சொற்பொழிவுகள்
நிகழ்ச்சி அழைப்பிதழ்

பேரன்புடையீர், வணக்கம்.

நிகழும் திருவள்ளுவராண்டு 2013 சிலைத்திங்கள் 9-ஆம் நாள் முதல் 18-ஆம் நாள் முடிய (24-12-82 முதல் 2-1-83 முடிய) எங்கள் பேரவையின் சார்பில் கீழ்க்கண்டவாறு பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள், திருக்குறள் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

இடம் : பவானி நகரச் சுழற் கழக அரங்கம்.
நேரம் : மாலை 6.30 முதல் 9 மணிவரை.

சொற்பொழிவு முடிந்தவுடன், ஈரோடு, கோபி, மேட்டூர், குமாரபாளையம், சங்ககிரி ஆகிய நகரங்களுக்குப் பேருந்துகள் உள்ளன.

வெளியூர் அன்பர்கள் இலவயமாகத் தங்குவதற்கு விரும்பின் சொற்பொழிவு நடைபெறும் அரங்கைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

வாய்ப்புள்ளவர்கள் முன் கூட்டியே தொகைவிடுப்பின், பவானியிலோ அல்லது ஈரோட்டிலோ தங்குமனைகளில் பதிவு செய்து தரப்படும்.

முதல் நாள் நடைபெற்ற சொற்பொழிவைப் பற்றிய கருத்தரங்கத்தில் மறுநாள் காலையில் அறிஞர்கள் கருத்துரையாற்றுவார்கள்.

நிகழ்முறை

24-12-82	வெள்ளி	திருக்குறள் நூல் தோற்றத்திற்கான வரலாற்று அடிப்படையும், தேவையும், அமைப்பியல் விளக்கமும்.
25-12-82	காரி	திருக்குறள் நூல் கூறும் வாழ்வியற் கூறுகள்.
26-12-82	ஞாயிறு	திருக்குறள் அறம்.
27-12-82	திங்கள்	திருக்குறள் கூறும் இல்லற அமைப்பு.
28-12-82	செவ்வாய்	திருக்குறள் கூறும் மெய்ப்பொருளியல்
29-12-82	அறிவன்	திருக்குறள் அரசு.
30-12-82	வியாழன்	திருக்குறள் அமைச்சு.
31-12-82	வெள்ளி	திருக்குறள் கூறும் குமுகாயம்.
1-1-83	காரி	திருக்குறள் கூறும் காமம்.
2-1-83	ஞாயிறு	திருக்குறள் சமயம் அல்லது திருவள்ளுவம்.

அனைவரும் வருக

பாவேந்தர் இலக்கியப் பேரவை
பவானி, பெரியார் மாவட்டம்.

செய்திகள்

1. சொல்லாய்வுச் சுற்றுக் கூட்டம்—7. சென்னை-8

சென்ற **5-10-82** அன்று மாலை **5** மணியளவில், வழக்கம் போல் சென்னை 8, 19 மார்சல் சாலையில் உள்ள, தமிழ், சமசுக்கிருதம் பிற இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனத்தில், சொல்லாய்வறிஞர் திரு. **ப. அருளி** வணி இ;ச இ. அவர்களின் சொல்லாய்வுச் சுற்றுக் கூட்டத்தின் ஏழாவது தொடர், பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இத் தொடர் கூட்டத்திற்கு, பன்மொழிப்புலவர் உயர்திரு. **கா. அப்பாத்துரையார்** க.மு. அவர்கள் தொகுப்புரை வழங்கினார். தொடக்கத்தில், நிறுவனத்தின் சமசுக்கிருதப் பிரிவு ஆராய்ச்சியாளர் திருவாட்டி. **கே. கோமதி** அவர்கள் நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். அதனையடுத்துப் பாவலரேறு அவர்கள் முன்னுரையாற்றினார். அதற்குப்பின், சொல்லாய்வறிஞர் அவர்கள், நேசம், வாங்கு, வஞ்சனை, ஊசி, ஊஞ்சல், பாரம், பாசம், சமம், ஓர் ஆகிய ஒன்பது சொற்களை எடுத்துக் கொண்டு மிகவும் திறம்பட ஆய்வுரை நிகழ்த்தினார். இறுதியில் தொகுப்புரையாளர் தமிழ், சமசுக்கிருதம் இவற்றின் வரலாறுகளைச் சுருக்கமாக எடுத்துக்கூறி, தமிழே உலக மொழிகளின் மூலமொழி என விளக்கிக் காட்டினார். பாவலரேறு அவர்களின் முடிவுரைக்குப்பின் நிறுவன இயக்குநர் **பர். ஆறு. அழகப்பனார்** அவர்களின் நன்றியுரைக்குப்பின் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

சொல்லாய்வுத் தொடரின் அடுத்த 8 ஆம் தொடர் நிகழ்ச்சி வரும் 28 11-82-ஆம் பக்கல் ஞாயிறு காலை 10 மணியளவில் மேற்படி நிறுவனத்தில் நடைபெறும் என்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2. இலக்குமி நாராயணன்-பார்வத நாச்சியார்-வாழ்க!

கடந்த துலை 3 (20 10-82) அறிவன் கிழமை, காலை 8 மணியளவில், நெல்லை மாவட்டம், தென் திருப் பேரையில், திருக்குறுங்குடி செல்வன். **சிவ. இலக்குமிநாராயணன்** அறி.இ க்கும், செல்வி. **பர்வத நாச்சியாருக்கும்**, சிவனியப்புலவர், ஒப்புபெற்ற தமிழ்ப்பேராசிரியர் உயர்திரு. **ஆதிமுருகவேள்** க.மு. அவர்கள் தலைமையிலும், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் முன்னிலையிலும், திருமணவிழா இனிதே நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி, புலவர். **ஆதிமுருகவேள்** க.மு., அருட்பாவலர் **ப. சானகிநாதன்** க.மு., **க. இளந்திரையன்**. க.இ.,கல்.இ., **கோட்டை இராவணன்** க.மு., புலவர்.

வே. சங்கர நாராயணன் அறி.இ., **கோ. சொக்கலிங்கம்,** புலவர் சிவசங்கு, ஏரல், பெரியபுராணக் கலைஞர். **காளிமுத்துப்பாண்டியன்,** பேரா. **பா. வளனரசு** க.மு., ஆ.ப. ஆகியோர் உரைநிகழ்த்தினர். இறுதியில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** மணமக்களை வாழ்த்தி நல்லுரை நிகழ்த்துமுகத்தான் அரிய கருத்துரையாற்றினர். நிகழ்ச்சி **சங்கத் தமிழ்ச் செல்வன்** அவர்களின் நன்றியுரையுடன் இனிதே நிறைவுற்றது.

3. தமிழ்ச்சங்க விழா—மேட்டுப்பாளையம்

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில், சென்ற 23-10-82 காரியன்று மாலை 7 மணியளவில், மேட்டுப்பாளையம் தமிழ்ச்சங்க மாத விழா, மகாசன மேனிலைப்பள்ளியில், திரு. **மா. பழனிச்சாமி,** அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. **சிவ. நடராசன்** க.மு., ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். அதன்பின் தலைவர் அவர்களைப் பாராட்டிப் பரிசு வழங்கி, திரு. **இரா. நடேசன்,** க.இ., கல்.இ. அவர்கள் உரை நிகழ்த்தினர். அதனையடுத்து, தலைவர் திரு. **மா. பழனிச்சாமி** அவர்கள், தாம் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று வந்தது பற்றிய தம் பட்டறிவுகளை நகைச்சுவையுடனும், உணர்வுடனும் அவையோர்க்கு எடுத்துக் கூறினர். அதன்பின்னர், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** 'தமிழியல் வாழ்க்கை' என்னும் பொருள் பற்றி நீண்ட அரிய மெய்யுணர்வுரை ஒன்றை நிகழ்த்தி, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினர். இறுதியில் திரு **தி. பார்த்தசாரதி** க.மு. அவர்கள் நன்றியுரை கூறினர்.

பாவலரேறு அவர்களுடன் பல்லடம் **மா. ஆறுமுகனார்.** தென்மொழி **ந. முத்துக்குமரன்** தென்மொழி **ப. துரையரசன்.** தென்மொழி **க. தமிழப்பன்** ஆகியோரும் நிகழ்ச்சிக்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

4. கணேசன்—நிர்மலா வாழ்க!

கடந்த 31-10-82 ஞாயிறு காலை 9.30 மணியளவில் குடியேற்றம், புவனேசுவரிபேட்டை, செல்வ விநாயகன் தெருவில் உள்ள 'கிளாசுபீடி' கட்டிடத்தில், அதன் உரிமையாளர் ஏ. எசு. பெரியசாமி அவர்களின் மகன் செல்வன். **பெ. கணேசனுக்கும்,** செல்வி. **நிர்மலாவுக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில் வாழ்க்கைத் துணை ஒப்பந்தவிழா இனிது நடைபெற்றது. சொல்லாய்வறிஞர் **ப. அருளி.** வணி.இ., ச.இ., பாவரசு **பொன்னிவளவன்,** பாவலர் சோ.சு. யுவராசன், பாவலர். குயில் தாசன், வ.ஆ.மா. தி.க. தலைவர் ஏ. பெருமாள், வி எம். சம்பந்தம், வேலூர். தி.க. துணைத்தலைவர் இ கோ. நேமிநாதன், நகர. தி. க.

"பண்டைத் தமிழிலக்கியத்தில் இசையியல்"

பர். வீ. ப. கா. சுந்தரனார் அவர்களின் ஆய்வுநூல்

(நூல் பற்றிய சிறு விளக்கம்)

நோக்கம்: (1) மறைந்து கிடந்துவருகிற இசைத்துறை நுட்பங்களையும் சிறப்பாக பழந்தமிழ் இசைத் துறைச் சொற்களையும் விளக்குவது. (2) ஆபிரகாம் பண்டிதர், விபுலானந்தர், அறிவர் எசு. இராமநாதர் முதலிய பலரிடம் இசை பற்றிய இலக்கணச் செய்திகள் முரண்பட்டும், ஒவ்வாதும், விளக்கமுறுமலும் கிடக்கின்றவற்றை ஆய்ந்து இவ்விவர் கூற்றுகளே ஏற்றற்குரியன என்று தக்க கரணியங்கள் பல காட்டி செவ்வியன நிறுவுதல், (3) இசைத் துறைச் சொற்களுக்கு வேர்ச் சொல் விளக்கங்கள் தருதல்.

ஆய்வின் பகுப்புகள் (1) பண்டை இசையிலக்கணம் எங்கெங்கு உள்ளன? (2) தொல்காப்பியத்தில் இசையிலக்கணம் தொடங்குக, (3) கோவையியல் (சுரம்), (4) ஒத்து இயல், (4) அலகு இயல், (5) இணை கிளை பகை நட்பு நரம்புகளின் இயல் (6) பண் இயல், (7) ஆளத்தியியல், (8) இடமுறை வலமுறைத் திரிபுகள், போன்ற நுண்ணிய பண் ஆக்கும் பல்வேறு முறைகள் (9) பண்டைத் தாள வகைகள், (10) கொட்டு முழக்கு முறைகள். (11) இசையில் காலக் கணக்குகள். (12) புத்தம் புதிய கண்டு பிடிப்புகள்.

இந்த ஆய்வுச் செய்திகள் இன்று இசைக் கல்லூரிகளின் பாடத் திட்டத்தில் இடம் பெறுவதற்கும் நடைமுறைப் பயிற்சி கட்கும் பயன்படுவன

ஆய்வு ஏட்டினைத் திருத்தி மதிப்பீடு செய்த பெரியார்கள்:- (1) பர். சுப அண்ணாமலை — தியாகராயர் கல்லூரி முதல்வர். (2) பர். சீதா அம்மையார் — சென்னைப் பல்கலைக் கழக இசைத்துறை இயக்குநர். (3) பர். எசு. இராமநாதர் — 'சிலப்பதிகார இசை நுணக்கம்' நூலார். முன் இசைக் கல்லூரி முதல்வர். O

(முன் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் ச. தண்டபாணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எ.க. துரைசாமி, மற்றும் 'கிளாசுபீடி' தொழிலாளர் அ. குப்புசாமி, பி. மூசாபாய் முதலியோர் மணமக்களை வாழ்த்தி நல்லுரை வழங்கினர். 'கிளாசுபீடி' உரிமையாளர் ஏ.எசு. பெரியசாமி நன்றியுரை வழங்கினர். அனைவர்க்கும் இனிய விருந்தளிக்கப் பெற்றது. தொடக்கத்தில் நகர தி.க. தலைவர். வி. சடகோபன் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினர்.

துள்ளி எழுந்திடு!

— தமிழவேள்

தூங்கும் தமிழா ! தூங்கும் தமிழா !
    திரண்டஉன் செல்வம் எல்லாம் தொலைந்தது !
ஓங்கி உயர்ந்தஉன் ஆட்சியும் ஒழிந்தது !
    ஒருபகல் உணவும் உன்கிளை இழந்தது !
நீங்காத் துயரினால் உன்இனம் நைந்தது !
    நஞ்சனை நெஞ்சுடை நெடுநாட் பகைவர்
தூங்கும்உன் தொடையில் திரித்தது போதும் !
    துள்ளி எழுந்திடு, தூக்கம் கலைந்தே !

வேழநாட்டுச் சேரன்உன் பாட்டன் !
    விற்கொடி இமயத் தலையில் இட்டவன் !
சோழனும் பாண்டிய மன்னனும் உன்றன்
    சுற்றத் தவரே ! கடாரம் கொண்டதும்
ஈழ நாட்டை வென்றதும் அவரே !
    எல்லாப் புகழையும் இழந்துன் இனந்தான்,
தாழக் கிடந்து தவித்தது போதும் !
    துடித்தெழு தமிழா, தூக்கம் ஒழித்தே !

மண்ணில் முதல்இனம் உன்இனம் தானே?
    முதன்மொழி என்பதும் உன்மொழி தானே ?
திண்ணையில் தெருவில் உன்இனம் கிடந்திடத்
    தந்திரத் தால்உன் பகைவர் ஆள்வதா ?
கண்டவர் மொழியெலாம் சிறப்புடன் முன்செல
    கன்னித் தமிழ்மொழி பின்னே போவதா ?
எண்ணிச் செயற்பட எழுந்திடு தமிழா !
    இதுவரை தூங்கிய தூக்கம் போதுமே !

தொல்காப் பியர்க்கு முன்னால் வாழ்ந்த
    தமிழர் இயற்றிய இலக்கியம் எங்கே ?
பொல்லாப் பரிமே லழகரின் முன்னால்
    பொய்யா மொழியாம் குறளுக்(கு) இருந்த
நல்லோர் உரைகள் பலவும் எங்கே ?
    நிகரில் நாடக இசைநூல் எங்கே ?
எல்லாம் உன்பகை ஒழித்தது போதும் !
    எழுவாய் தமிழா, தூக்கம் தொலைந்தே !

பறவைக் கொக்கும் பொய்சொல வராது !
    பூதமும் நடுநிலை தவறா(து) இருந்தது !
கறவை ஆவும் குழந்தையைக் காத்தது !
    குருவியும் கற்புடன் வாழ்ந்த(து) எனும்படி

அறமும் அன்பும் ஒழுக்கமும் அந்நாள்
ஆண்ட(து) இம மண்ணில் இன்றோ அவையெலாம்
பறந்து போனதே ! எப்படி என்று
பார்த்திட, தமிழா ! எழுந்திடு விழித்தே !

மெய்யின் உயிரின் இறையின் தன்மையும்
மக்கள் வாழ்வின் நோக்கமும் கண்டு
மெய்யுணர் வோடே வாழ்ந்தஉன் முன்னோர்
மறைபாய்ச் சொல்லிய மந்திரம் மறைத்து,
தெய்வம் இதுவென எதையோ, காட்டித்
தகவில் புனைவும் புரட்டும் கூறிப்
பொய்த்துன் பகைவர் பிழைத்தது போதும் !
புரண்டெழு தமிழா, தூக்கம் துறந்தே !

உண்பதில் அறுசுவை உணவினைக் கண்டும்,
உலகில் ஐம் பூதச் சேர்க்கையை அறிந்தும்,
மண்ணில் நால்வகை நிலங்களைத் தெரிந்தும்,
மொழியில் மூவகைப் பிரிவுகள் செய்தும்,
எண்ணும் வாழ்க்கையை இரண்டாய்க் கொண்டும்,
இறையது ஒன்றே எனபதை உணர்ந்தும்
பண்புடன் வாழ்ந்தஉன் இனத்தின் பழைமையை
பார்க்க எழுந்திடு இருகணும் திறந்தே !

இழந்தஉன் ஆட்சி உரிமையை அடையவும்
இடர்ப்படும் உன்இனம் இன்னல் நீங்கவும்
அழகிய உன்மொழி உயர்நிலை பெறவும்
அரவினும் கொடியஉன் உட்பகை அழியவும்
விழித்தெழு தமிழா ! விழித்தெழு தமிழா !
வீணுப் தூங்கி வீழ்ந்தது போதும் !
ஒழிந்தது காரிருள் ! ஒளிவருகின்றது !
உடனே எழுந்திடு, உன்கடன் செயற்கே ! O

பாவலரேறு அவர்களுக்கு
நெய்வேலி சுப. திருமாறன் அவர்களின் அன்பளிப்பு!

நெடுநாளைய தென்மொழியன்பரும், புரக்குநரும், தூய தமிழ்த் தொண்டரும், உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தின் முதன்மைக் குழு உறுப்பினரும் ஆகிய நெய்வேலி சுப. திருமாறன் அவர்கள், ஐயா அவர்களுக்கு மெத்தை படுக்கை ஒன்றும் தலையணைகள் இரண்டும் செய்து, அன்பளிப்பாக அளித்துள்ளார்கள். அவருடைய அன்பு உள்ளத்திற்கும், தென்மொழியைப் புரக்குந் தொண்டிற்கும் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

உழைப்போம்! வாரீர்!

(கடலூர். மணிமாறன், க. மு.)

செத்துவிட்ட வடமொழியை உயிர்ப்பிக்கச்
சிற்சிலரோ முயலும் வேளை
நத்துதற்கே விழையாத இந்தியெனும்
நச்சரவைக் கொலுவி லேற்றப்
பித்தனைப்போல் அலைகின்றார்; பெரும்பாடு
படுகின்றார் ஊமை யன்வாய்
முத்துமொழி மொழிந்திடுமோ ? மூளையிலா
முண்டங்கள் செயல்தாம் என்னே !

பிறமொழியின் கலப்பினிலே பேரின்பம்
பெறுகின்றார்; கொள்கை தம்மில்
பிறழ்கின்றார் நேற்றொன்றும் இன்றொன்றும்
பேசுவதில் வேட்கை கொண்டார் !
குறள்நெறியை எண்ணுகிலார்; மேடைகளில்
கோட்டானாய் அலறு கின்றார்;
சிறிதேனும் இனம்மொழியை நினையாமல்
செயலற்றுத் திரிகின் றாரே !

தொண்டாற்ற வாழ்கின்றோம் தொடர்ந்திங்கே
தூயநெறி புதுக்கி நாட்டை
வண்டிமிரும் சோலையெனப் பல்துறையின்
வளம்கொழிப்பச் செய்வோ மென்றே
கண்டொன்றும் காணாமல் பிறிதொன்றும்
கழறிடுவார் கரவும் பொய்யும்
துண்டுதுண்டாய்ச் சிதறிடவே இரண்டகத்தைத்
தோலுரித்துக் காட்டு வீரே !

உலகமெலாம் வாழ்கின்ற தமிழினத்தார்
ஓரணியில் நிமிர்ந்து நிற்க
இலகுபுகழ்த் தமிழ்மொழியில் மேன்மேலும்
எழிற்கலைகள் பெருக, நாட்டில்
விலகாத சாதிமத இருளோட்டி
வேற்றுமையும் இழிவும் நீங்க,
புலர்கின்ற விடியலினை நெஞ்சிருத்திப்
புதுமுனைப்பில் உழைப்போம் ! வாரீர் !

வழக்கு மன்றங்கள் வண்டமிழால் இயங்க

(சிந்தனைச் செம்மல் கு.ச. ஆனந்தன். வழக்குரைஞர், கோபி.)

7. ஏற்கனவே திரு. அனந்தநாராயணன் அவர்கள் தலைமையில் அமைந்த குழுவால் உருவாக்கப்பட்ட **"சட்டச் சொல் அகராதி"** (Law Lexican) சிறப்பாக அமைந்துள்ளது. ஆனால் அது சிறியது; விரிவானதன்று; போதுமானதாகவும் இல்லை. பல அறமன்றங்கள் தந்த சட்ட வரையறைகளையும் (Definitions) விளக்கங்களையும் (Intrepretations) முறையாகத் தொகுத்து விரிவான **"சட்டச் சொற்களஞ்சியத்தை"** (Law Lexican) மேற்கோள் குறிப்புகளுடனும், மற்ற குறிப்புகளுடனும் தமிழில் உருவாக்க வேண்டும்.

8. சட்ட வழக்குரைகளையும் (Pleadings) மற்ற முறை மன்ற நடவடிக்கைகளையும் (Proceedings) ஒரே சீர்மையுடன் எழுதுவதற்குத் துணைபுரியும் **"மாதிரி உரைகளைக்"** (Drafts) கொண்ட நூல்களைத் தமிழில் செய்ய வேண்டும்.

9. ஆட்சிமொழி ஆணையத்தால் தமிழாக்கம் செய்யப்பட்ட பிழையுடைய **"அரசியல் சட்டத்தை"** முற்றிலும் திருத்தி அமைத்துப் பிழைகளை நீக்கிச் சரியான தமிழ் **"அரசமைப்பை"** (Constitution) வெளியிட வேண்டும்.

10. **அடிப்படை உரிமைகள்** (Fundamental Rights); **நடுவண்-மாநில உறவுகள்** (Centre and State Relations); **அறப் பேராணைகள்** (Writs); மீவுயர்நெறி மன்றத்தில் வழக்கிடும் பகுதி; இன்னும் இவை போன்ற அரசியல் சட்டத் தனிப் பகுதிகளை முழுச் சட்ட விளக்க உரைகளுடன் (Commentaries) தமிழில் தனித்தனியாக உருவாக்க வேண்டும்.

11. முறைமன்ற நடவடிக்கைகளுக்குரிய எல்லாப் படிவங்களையும், (Forms) சீர்மை கருதி, தூய தமிழில் மொழி பெயர்த்து வெளியிட வேண்டும். முதல் கட்டமாக, சட்டத் தமிழ்த் தனி அமைப்பே அப்படிவங்களைத் தேவையான அளவிற்கு அச்சடித்துக் குறைந்த விலையில் விற்க வேண்டும். அப்படிவங்களை மட்டுமே முறை மன்றங்களில் பயன்படுத்த வேண்டுமென்று ஆணையிட வேண்டும்.

12. **"உரிமையியல் நடைமுறை நெறிகள்"** (Civil Rules of Practice) மற்றும் **"குற்றவியல் நடைமுறை நெறிகள்"** (Criminal Rules of Practice) இன்னும் தொடர்புள்ள **"மற்ற நெறிகள்"** ஆகியவற்றையும் தமிழாக்கம் செய்ய வேண்டும்.

தீர்ப்புத் திரட்டுகளும் இதழ்களும்

1. தற்போது உள்ள **"தீர்ப்புத் திரட்டு"** மீவுயர் நெறி மன்றத்தில் சில முகாமைத் தீர்ப்புரைகளையும் "சென்னை உயர்நெறி மன்றத்தில்" குறிப்பிட்ட தீர்ப்புரைகளையும் மட்டும் வெளியிடுகிறது. கீழ்க்காணும்படி அத்தீர்ப்புத் திரட்டை மேலும் விரிவாக்க வேண்டும்.

உரிமையியல் தீர்ப்புரைகளைத் (Civil Judgements) தற்போதைய "Indian Law Reporter" பாணியில் திரட்டி, **"உரிமையியல் தீர்ப்புத் திரட்டு"** என்ற இதழாகத் திங்கள் தோறும் வெளியிட வேண்டும். தீர்ப்புரைகள், சிறு குறிப்புகள் (Short Notes), மேன் முறையீடுகள், மறு ஆய்வுகள், தனிக் கட்டுரைகள், மற்றும் சட்டச் சொற்களின் வரையறைகள், இன்னும் சில தனிச் சிறப்பு வகைகள் ஆகியவற்றை அத்திரட்டு தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும்.

3. அதே போல் **"குற்றவியல் தீர்ப்புத் திரட்டும்"** வெளியிடப் பட வேண்டும்.

4. தீர்ப்பாயங்களின் (Tribunals) தீர்ப்புரைகளுக்கு என்று தனி இதழ் வேண்டும்.

5. "Tamil Nadu Law Journal" போல, **தீர்ப்புகளின் குறிப்புகளை** மட்டும் விரைந்து தரக்கூடிய திங்கள் இருமுறை வெளியாகும். தனி இதழ் வெளியிடப்படவேண்டும்.

6. அவ்வப்போதைய, சட்டங்கள் (Acts), நெறிகள், (Rules), அரசு அறிவிக்கைகள் (Notifications). ஆணைகள், (Orders) ஆகியவற்றைத் திரட்டித் தரும் திங்களுக்கொரு முறை வெளியாகும் தனி இதழும் தேவை.

7. மேற்சொன்ன ஐந்து வகையான தீர்ப்புத் திரட்டுகள், தமிழகத்தில் உள்ள எல்லா முறை மன்றங்களிலும் கண்டிப்பாக இடம் பெற வேண்டும். மற்ற தனியார் நிறுவனங்களுக்குப் போட்டியாகத் தமிழ்த் தீர்ப்புத் திரட்டுகள் எளிய விலையில் எல்லோருக்கும் தரப்படவேண்டும். இல்லையெனில், ஆங்கிலத்தில் தற்போதுள்ள தீர்ப்புத்திரட்டுகளின் ஆளுமை நீங்காது.

8. எல்லா வழக்குரைஞர்கள் கழகங்களும் அவற்றைக் கண்டிப்பாக வாங்கத் தக்க வழிவகைகளையும் செய்ய வேண்டும்.

தமிழில் மட்டுமே நடவடிக்கைகள்

1. வழக்குரைகள் (Plaints) எதிர்வழக்குரைகள், (Written Statements) குறிப்புரைகள், எழுவினாக்கள், மற்ற எல்லா முறை மன்ற நடவடிக்கைகளும் **கண்டிப்பாகத் தமிழில் இருக்க வேண்**

டும். ஒரு சிறு பகுதி கூட ஆங்கிலத்தில் இருக்கக் கூடாது. விளக்கத்திற்காக மட்டும், பிறை அடைப்புகளில் ஆங்கிலக் குறிப்புகள் தரலாம்.

2. வழக்குக் கோப்புகளில் நாள்தோறும் எழுதப்படும் குறிப்புகள், ஆணைகள், அனைத்தும், தமிழிலேயே இருத்தல் வேண்டும். வழக்குகள் அழைக்கப்படும்போது (Calling Work) தமிழில்தான் அழைக்கப்பட வேண்டும்; பேசப்படவும் வேண்டும்.

3. மேன் முறையீடுகள் (Appeals), மறு ஆய்வுகள் (Reviews), சீராய்வுகள் (Revisions) போன்ற அனைத்தும் தமிழிலேயே எழுதிப் பதிவு செய்யப்பட வேண்டும். உத்தரவுகளும் தமிழில் எழுதப்பட வேண்டும்.

4. எந்த ஒரு முறைமன்றக் குறிப்பேடும், தமிழ் தவிர மற்ற மொழியில் பதிவு செய்யத்தரப்பட்டால் ஏற்கக் கூடாது.

5. எந்த ஒரு நடுவர்க்கும் (தமிழ் தெரியாத சிறுபான்மையினர் தவிர) ஆங்கிலத்தில் தீர்ப்புரை எழுதத் தனி இசைவு தரக் கூடாது. இப்போது தரப்பட்டிருக்கும் அவ்வகை இசைவை உடனே நீக்கிவிட வேண்டும்.

6. அறமன்றத் துறைத் தொடர்புள்ள அனைத்துக் கடிதப் போக்குவரத்துகளும் (Correspondence) குறிப்புகளும், (Notes) ஆணைகளும், தமிழிலேயே இருக்க வேண்டும். அறமன்றத் தலைவர்களின் அலுவல்களிலும் கடிதத் தொடர்புகளிலும் ஆங்கிலம் கூடாது.

7. அறமன்றப் போல்வுகள் (Quasi Judicial Forum) தீர்ப்பாயங்கள் (Tribunals) ஆகியவற்றின் அனைத்து நடவடிக்கைகளும் தமிழில் தான் இருக்க வேண்டுமென, உரிய கட்டளைகள் பிறப்பிக்கப்படுவதோடு அவற்றைச் செயற்படுத்துவதற்குரிய தனி நெறிகளையும் செய்தல் வேண்டும்.

8. சட்டத் தமிழ் சார்ந்த அனைத்து நூல்களும், இதழ்களும், சட்டத் தமிழ் வளர்ச்சிக் கழகத்திலிருந்தே விற்பனை செய்யப்பட வேண்டும்.

மற்ற வழி வகைகள் :

1. வழக்குரைஞர்கள் கழகங்களின் (Bar Associations) தொடர்புடனும், ஒத்துழைப்புடனும், அறமன்ற நடவடிக்கைகளை முழுவதும் தமிழிலேயே வெற்றியொடு இயங்குவதற்கு ஏற்ற சூழ்நிலையையும், வழி வகையையும், நாம் காண வேண்டும்.

2. தமிழக உயர்நெறி மன்றத் தலைமைநடுவருடனும், மற்ற நடுவர்களுடனும், உரிய முறையில் கலந்துரையாடி, தக்க நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொள்ள வேண்டும்.

ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகளுக்குள் வேற்றுமை ஏன்?

பெல்லா லியனிதோவா

இலியர் மன்னனுக்கு மூன்று புதல்விகள் இருந்தனர். அவர்களில் கோனரி, இரீகன் என்ற மூத்த பெண்கள் கடின நெஞ்சம் படைத்த வஞ்சகிகளாகவும், பல தீய செயல்கள் புரிந்த கொடிய அரக்கிகளாகவும் இருந்தனர். அந்த மகள்களினாலேயே இலியர் மன்னனுக்குப் பைத்தியம் பிடித்தது. ஆனால் இளையவள் கார்டெலியாவோ அன்பும், பண்பும் நிறைந்த பொற்பினி; தந்தையின் மீது

(முன் பக்கத் தொடர்ச்சி)

3. இந்தி பேசும் மாநிலங்களில் இந்தி, முறைமன்ற மொழியாக முழுமையான நிலையில் இயங்கி வருகிறது. சட்டத்தமிழ் வல்லுநர்களையும் அரசு அலுவலர்களையும், அம்மாநிலங்களுக்கு அனுப்பி, அங்கிருக்கும் நிலைகளை நேரடியாகக் கண்டறிந்து, அவற்றை ஆய்வு செய்து பயன்படும் முடிவுகளை எடுத்து, அவற்றைத் தமிழக முறை மன்றங்களில் தேவையானல் செயற்படுத்தலாம்.

4. முறைமன்ற மொழியாகத் தமிழ் இயங்கும் போது ஏற்படும் சிக்கல்களையும், இடையூறுகளையும், தவிர்த்து உரிய முறையில் சட்டத் தமிழை அறமன்றங்களில் வளர்ப்பதற்கு, தொடர்புள்ள அனைவரையும் ஒருமுகமாக இணைத்துச் செயல்பட வேண்டும். அவ்வப்போது அதற்குத் தேவையான வழிவகைகளைக் காணவும் தொடர்பு கொள்ளவும், **"சட்டத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்"** கீழ் ஒரு **"தனிக் குழு"** அமைககப்பட வேண்டும்.

5. தேவையான திட்டங்களையும் நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்வதற்குரிய வழிவகைகளைக் காண ஒரு **"வல்லுநர் குழு"** (Expert Committee) ஒன்று அமைத்து **60 நாட்களில்** அவர்களின் பரிந்துரைகளைப் பெற்று அவற்றின் அடிப்படையில் தேவையான நடைமுறைகளை உடனே வகுத்துச் **சட்டத்தமிழ் வளர்ச்சிக்கழகம்** செயல்பட வேண்டும்.

6. சட்டக் கல்லூரிகளில் அனைத்துச் சட்டங்களும் தமிழிலேயே கற்பிக்கப்படல வேண்டும். விளக்கங்களுக்கு மட்டும் ஆங்கிலத்தை அவ்வப்போது (தேவையானல்) பயன்படுத்தலாம்.

இவ்வகையில் செயல்பட்டால், தமிழக முறை மன்றங்களில் தமிழை நுட்பமான சட்ட மொழியாகவும், முழுமையான அறமன்ற மொழியாகவும், வலிவுடனும், பொலிவுடனும் விரைவில் இயக்கிட முடியும். இயக்க வேண்டும்! O

அன்பு செலுத்தும் பண்பிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவள் அவள். இது சேக்சுபியரின் புகழ்பெற்ற நாடகம்.

ஒரே குடும்பத்தில் பிறந்த குழந்தைகளிடையே எப்படி அத்தனை வேறுபாடு இருக்க முடியும்? இன்றும்கூட அத்தகைய வேறுபாடுகளை நாம் காண்கிறோம்.

ஒரு குடும்பத்தில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும், மனப் போக்கிலும், தன்மையிலும், ஈடுபாட்டிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. எனினும் இயற்கையாக அந்தந்தக் குழந்தைகளிடம் காணப்படும் தன்மைகளைக் கொண்டு 'ஏன் அவை மாறுபட்டுள்ளன?' என்று கேட்பதில்லை. குடும்பத்தின் வளர்ப்பு காரணமாக அந்தக் குழந்தையிடம் தோன்றும் மாந்தப் பண்புகள் ஏன் மாறிவிடுகின்றன என்பதுதான் கேள்வி.

"நமக்கு இரண்டு மகன்கள் இருக்கின்றனர். மூத்தவன் எவ்வளவு ஈக உள்ளமும், பரிவும் நிரம்பியவனாக இருக்கிறான்! இளையவனோ தன்னலம் பிடித்தவனாக இருக்கிறானே! நாம் இருவரையும் ஒரே மாதிரியாகத்தானே வளர்த்தோம்," என்று சலித்துக்கொள்ளும் தாய்மார்களை நீங்கள் கண்டிருப்பீர்கள்.

ஒரு மகன் நேர்மையின் உருவம்; மற்றொரு மகனோ பொய்யின் பிறப்பிடம். ஒரு மகள் உண்மையே பேசுகிறாள்; மற்றொருத்தியின் வாயில் உண்மையே வருவதில்லை. ஒருத்தி அடக்கமானவள்; மற்றொருத்தி தற்பெருமை மிக்கவள்...ஒரே குடும்பத்தில் ஏன் குழந்தைகள் அவ்வகையில் மாறுபடுகின்றன?

'ஒரே குடும்பத்தில் பிறந்த குழந்தைகள்', என்பதை மட்டும் தாம் நாம் அழுத்திக் கூறுகிறோமேயன்றி, ஒவ்வொரு குழந்தையும், காலத்தால் மாறிக் கொண்டிருக்கும் குடும்பச் சூழ்நிலையில் வளருகிறது என்பதை நாம் கவனிக்கத் தவறிவிடுகிறோம்.

புலப்படாத மாற்றங்கள்:

முதற்கண், பெற்றோர்களிடம் மாறுபாடு தோன்றுகின்றது. ஆண்டுகள் செல்லச் செல்ல, பட்டறிவு முதிர்ச்சியடைகிறது; பெற்றோர்களுக்கு ஏற்படும் வெற்றிகளும், தோல்விகளும், இன்பங்களும், துன்பங்களும் அவர்களின் வாழ்வில் இனங்காண முடியா மாற்றங்களை ஏற்படுத்தத்தான் செய்கின்றன. நாம் மாறுகிறோம் என்பதுதான் முகாமை; அது நல்லதுக்கோ, கெட்டதற்கோ—மாற்றம் ஏற்படுகிறது; நேற்றிருந்ததைப் போன்றே நாம் இன்றிருப்பதில்லை; நாளை நம்மிடம் சிறிதளவு மாற்றம் ஏற்படத்தான் செய்யும்.

இரண்டாவதாக, ஒவ்வொரு குழந்தையும் ஒரு குடும்பத்தில் தோன்றும் போது, அந்தக் குடும்ப அமைப்பும் மாறுகிறது. அளவு

அடிப்படையான மாற்றத்துடன், குணநிலை வகையில் மாற்றமும் ஏற்படுகிறது. குடும்ப உறுப்பினர்களின் பங்கும், கடமையும் திருத்தியமைக்கப்படுகின்றன; புதியதோர் அமைப்பு புகுத்தப் படுகிறது.

குடும்பம் என்றும் போல ''ஒரே மாதிரியாக'' இருப்பதில்லை. ஒரே பெற்றோர்களுக்குப் பிறந்த எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரிதான் இருக்க வேண்டும் என்று கருதுபவர்கள் இதைச் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

எடுத்துக்காட்டாக, ஒரு கணவன்-மனைவி தங்களது முதற் குழந்தையை செல்லமாக வளர்த்து அதன் காரணமாக, அக்குழந்தை தற்பெருமையும் அடமும் பிடித்தவனாக வளர்ந்து விடுகிறான். ஆனால் இரண்டாவது குழந்தை பிறந்தவுடன், பெற்றோர்களின் அணுகுமுறை மாறுகிறது; எனவே இரண்டாவது குழந்தை பொது வான பண்புகளைக் கொண்டவனாக வளர்கிறான்.

மற்றொரு குடும்பத்தை எடுத்துக் கொள்வோம். தம் மகளுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்பதற்காக, பெற்றோர் தங்களின் ஒவ்வொரு செயலையும் அளந்து செய்கின்றனர். பல ஆண்டுகள் கழித்த பின்னர், மற்றொரு மகள் பிறக்கிறாள்; இதற்குள் பெற்றோருக்குச் சோர்வு ஏற்பட்டு விடுகிறது; அல்லது தங்களது முந்திய பட்டறிவை மறந்து விடுகின்றனர். (மூத்த மகளுக்கு இப்போது 17 அகவை); இரண்டாவது மகளை மிகச் செல்லமாக வளர்க்கின்றனர். அதன்பின்னர் அவர்களுக்கு வினைதான் காத்தி ருக்கும் என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை.

தங்களது போக்கை மாற்றிக் கொள்ளும் குடும்பங்களில்தாம் இந்த நிலை என்றால், சில குடும்பங்களின் போக்கு மாறாமலிருந்தால் ....? ஏழு அகவையாயிருக்கும்போது செரியோசாவிடம் ஒரு திடீர் மாற்றம் ஏற்பட்டது. திடீரென அவன் அடம் பிடிக்கத் தொடங்கி னான். சிறிய சிறிய செயலுக்கெல்லாம் காலை உதைத்துக் கொண்டு பெரிய சண்டை போடத் தொடங்கினான். போகப் போக அஃது அளவிற்கு மீறிச் சென்றது. யாரேனும் விருந்தினர்கள் வீட்டிற்கு வந்தால், பெற்றோர்களுக்கு மிகவும் இடர்ப்பாடாக இருந்தது. விருந்தினர்களை அவன் அவ்வளவு தொந்தரவுக்குள்ளாக்கினான்.

பெற்றோர்கள் அவனைக் கண்டித்துப் பார்த்தனர். பயனில்லை. தங்களின் பழைய நண்பர் ஒருவர் இதேபோன்றிருந்தது பெற்றோர் களுக்கு நினைவுக்கு வந்தது. அந்த நண்பர் வீட்டிற்கு ஒருநாள் செரியோசாவையும் அழைத்துச் சென்றார்கள். அவர் அடித்த ஆர்ப்பாட்டங்களைப் பார்த்து, செரியோசாவுக்கு ஓரளவு அறிவு பிறந்தது.

'அவரைப் போலத்தான் நானும் நடந்து கொள்கிறேனா?' என்று தாழ்ந்த குரலில் கேட்டான். அதன்பின்னர் அவனைத் திருந்தி விட்டான். இரண்டு ஆண்டுகள் கழித்து அக்குடும்பத்தில் இகோர் பிறந்தான். ஏழாவது அகவையில் அவன் அண்ணனைப் போலவே இவனும் ஆகிவிட்டான். வழி வழியாக ஏதோ ஒரு கோளாறு 7-ஆம் அகவையில் இப்படிப் படாதபாடுபடுத்துகிறதோ என்னவோ? பெற்றோருக்குத்தான் அந்தப் பையனை எப்படித் திருத்த வேண்டுமென்று தெரியுமே! தங்கள் பழைய நண்பர் யூரா வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். யூராவும், இகோரும் சேர்ந்து வீட்டையே அமர்க்களப்படுத்தினர். நாளாக ஆக இருவருமே சேர்ந்து படு ஆர்ப்பாட்டம் புரிந்தனரே தவிர, இகோர் திருந்தவில்லை. யூரா நித்தமும் இவர்கள் வீட்டிற்கு வந்துவிடுவார். யூராதான் தனது உலகம் என்று நினைக்கத் தொடங்கி விட்டான் இகோர்! முன்னைவிட அவனது ஆர்ப்பாட்டமும், தற்பெருமையும் அதிகமாகி விட்டன. ஐயகோ! அந்தப் பெற்றோர்களது தந்திரம் வெல்லவில்லை.

இதிலிருந்து தெரிவதென்ன? ஒவ்வொரு குழந்தையிடமும் ஒரு புதிய அணுகு முறையைக் கடைப்பிடிக்க வேண்டி இருக்கிறது. ஒரே விளைவை பெறுவதற்குப் பல மாறுபட்ட முறைகளையும், மாறுபட்ட சொற்களையும், மாறுபட்ட எடுத்துக்காட்டுகளையும் பயன்படுத்த வேண்டியுள்ளன. அதுதான் பெற்றோர்கள் அறிந்து கொள்ள வேண்டிய கமுக்கம். நாம் நம் குழந்தைகளைத் தேர்ந்தெடுப்பதில்லை; ஆனால் அவர்களை விரும்புகிறோம்; நமது அன்பிற்கு உடந்தையாக அவர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். நமது குழந்தைகள் ஒருவர்க்கொருவர் மாறுபட்டிருக்கலாம்; ஆனால் சிறந்த மாந்தப் பண்புகளை அவர்கள் பெற்றிருக்க வேண்டுமென்று விருபுகிறோம்.

சிலரை, நாம் விருப்புவது போல ஆக்குதல் எளிது; சிலரை அவ்வாறு ஆக்குவது கடினம். ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒவ்வொரு தந்திர முறையைக் கடைப்பிடிக்க வேண்டி வரலாம். ஆனால் அது தான வாழ்க்கை.

கார்டெலியாவைப் போல், இலியர் மன்னனது மற்ற இரு பெண்களும் வாழவில்லையென்றால் அதற்குக் காரணம் அவர்கள் வளர்க்கப் பட்ட வகைதான்.

சேக்சுபியர் இலியர் மன்னனது வரலாற்றை வடித்தெடுத்துத் தராவிடில், இலக்கிய உலகு அந்த அளவு இழப்படைந்திருக்கும், ஆனால் அதைப்போன்ற துன்பியல் நாடகங்கள் உண்மை வாழ்வில் எவ்வளவு குறைவாக உள்ளதோ, அவ்வளவு நமக்கு நல்லது. O

ஊட்டவுணவுத் திட்டம்

(ஒரு மதிப்பீடு) — தலைமையாசிரியர் ஒருவர்

(தமிழக அரசின் ஊட்டவுணவுத்திட்டத்தைப் பற்றிப் பலரும் பலவாறான நன்மை தீமைகள் பற்றிய கருத்துரைகளை வெளியிட்ட வண்ணமுள்ளனர். அவற்றின் மொத்தப்பயன், விளைவு ஆகியவை ஒருவாறு இருக்கட்டும். முதலில் அத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடுகள் எவையேனும் உள்ளனவா என்று நெல்லை மாவட்டத்தில் உள்ள தலைமையாசிரியர் ஒருவரைக் கேட்டிருந்தோம். நடுநிலையான உள்ளத்துடன் அவ்வாசிரியர் குறித்து அனுப்பிய கருத்துகள் இங்கே வெளியிடப் பெறுகின்றன. அரசு இக் கட்டுரைக் கருத்துகளை நன்கு மனத்தில் கொண்டு, அவற்றைக் களைவதற்கு முயற்சி செய்யும் என்று நம்புகிறோம். மற்று, இத் திட்டம் பற்றிய திறனாய்வு தென்மொழியில் விரைவில் வெளிவரும்.

— ஆசிரியர்.)

1-7-82 முதல் இத் திட்டம் செயற்பட்டு வருகிறது. இதுபற்றிய முதல் அரசாணை 29-5-82-இல் (R.C. No. 98085 SN6/82-2 Dated 29th May 1982) வெளியிடப்பட்டது. பள்ளிகளில் பயிலும் 5 முதல் 9 வரை அகவையுள்ள மாணவர்களை இத் திட்டத்தில் சேர்க்க வேண்டும் என முதலில் கூறப்பட்டது. பின்னர் அது 1-6-1973க்குப் பின் பிறந்த குழந்தைகளுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டது.

இதனால் ஒன்று முதல் 5-ஆம் வகுப்புவரை பயிலும் அனைத்துச் சிறார்களுக்கும் உணவு கிட்டும் வாய்ப்பில்லை. காட்டாக ஒரு நடுநிலைப்பள்ளியில் 300 மாணவர்கள் பயில்கின்றனர். அவர்களில் இந்த அகவை வரம்புப்படி 165 மாணவர்களுக்கு ஊட்டவுணவு கிட்டுகிறது. எனினும் சிற்றூர்களில் அகவை வரம்புக்குட்பட்ட மாணவர்களைத் தவிர எஞ்சியவர்களை வெளியேற்றுவதில்லை. அவர்களுக்கும் சேர்த்தே உணவு வழங்கப்படுகிறது. இதனால் 165 மாணவர்களுக்குரிய அளவு 300 மாணவர்களால் பங்கிடப்படுகிறது. எனவே போதிய உணவு கிடைக்காது ஊட்டவுணவு என்பது பொருந்தாமல் போய்விடுகிறது. இந்த அகவை வரம்பை மாற்றி, அனைத்து ஏழைமாணவர்களுக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை இன்னும் ஏற்கப்படவில்லை. இடையில் கடந்த ஆண்டு பழைய உணவுத் திட்டத்தில் உண்டவர்கள் இருப்பின், அகவை வரம்பின்றி அவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என நெறிமுறை தளர்த்தப்பட்டது. எனினும் அதனாலும் மிகுந்த பயன் விளையவில்லை. காரணியம் பழைய உணவுத் திட்டத்தில் குறைந்த அளவு மாணவர்கள் உண்ணவே ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. (ஒரு பள்ளியில் பயிலும் மாணவர்களில் 3-இல் ஒரு பகுதியினர்க்கே கூடுதல் வழங்கப்பட்டது).

உணவுப் பொருள்களின் அளவுகள் : ஒரு மாணவனுக்கு அரிசி 100 பதினெடை (கிராம்), பருப்பு 15 பதினெடை எண்ணெய் 7 பதினெடை என நுகர்பொருள் நிறுவனத்தால், பள்ளியின் வாயிலில் வந்தே திங்கள் தோறும் வழங்கப்படுகிறது. சில போழ்து தேவைப்பட்டியல் உரிய படிவத்தில், உரிய காலத்தில் பள்ளியிலிருந்து வந்து சேரவில்லை என்ற கரணியத்தைக் காட்டிச் சில பள்ளிகளுக்கு உணவுப்பொருள் வழங்காமல் விட்டுவிடுகின்றனர். பின்னர் அவர்கள் தங்கள் செலவில் மேற்கண்ட பொருள்களை, மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து பெற்று வரவேண்டிய இடர்ப் பாடான நிலைக்கு ஆளாகின்றனர்.

அளவு போதுமானதென்றே சொல்லலாம். சிற்றூர்களில் மேலும் கூடுதல் வழங்கினாலும் உண்கின்றனர். ஒரு திங்களுக்கு மூன்றுநாள்கள் அமெரிக்கக் 'கேர்' நிறுவனத்தால் வழங்கப்படும் கோதுமை (Bulgar Wheat) தரப்படுகிறது. அதைக் கொண்டு அந்த நாள்களில் உப்புமா செய்து வழங்கப்படுகிறது. எண்ணெயும் (Salad oil) ஆறு நாள்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்வாறு இரு வேறு கணக்குகள், தனித்தனிப் பதிவேடுகள் வைக்க வேண்டியுள்ளது.

மற்ற செலவுகள் : காய்கறி, விறகு, பலசரக்கு ஆகியவற்றுக்காக ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 11 காசு மேனி வழங்கப்படுகிறது அரசால். இதில் காய்கறிக்கு 6 காசும், பலசரக்குப்பொருள்களுக்கு 2 காசும், விறகுக்கு 3 காசும் வழங்கப்படுகிறது. ஆனால் விறகுக்கு இருமடங்கு செலவாகிறது. பலசரக்குக்கும் 2 காசு பற்றாது. எனவே கூடுதல் செலவு காய்கறிக்கென வழங்கப்பட்ட பணத்தில் தான் ஈடுசெய்யவேண்டியுள்ளது. அப்போது காய்கறியின் அளவைக் குறைக்க நேர்கிறது.

சமையற்காரர் — உதவியாளர் : ஒவ்வொரு பள்ளிக்கும் சமையல் செய்ய ஒருவரும், அவர்க்கு உதவியாளர் ஒருவரும் அமர்த்தப் பெற்றுள்ளனர். சமையற்காரருக்கு, ஊதியம் நாளொன்றுக்கு உருபாய் இரண்டும், உதவியாளர்க்கு ஓர் உருபாயும் அளிக்கப்படுகிறது. 500க்கு மேற்பட்ட மாணவர்கள் இருப்பின் கூடுதல் சமையற்காரர் ஒருவரை அமர்த்திக் கொள்ளலாம். அவர்களுக்கும் வழங்கப்படுகிற ஊதியம் மிகக் குறைவு; வேலையோ மிகுதி.

சமையற்கூடம்—தட்டுகள், குவளைகள்: சமையற்கூடம் அமைக்க ஒரு மாணவனுக்கு 32 உருபாய் மேனி வழங்கப்படுகிறது. இந்தத் தொகை குறைந்த அளவு மாணவர்கள் உள்ள பள்ளிக்குப் பற்றாது. பொதுமக்களிடம் நன்கொடைபெற்று எஞ்சிய தொகையைச் சேர்த்துச் சமையற்கூடம் கட்டச் சொல்கின்றனர். இது எல்லா ஊர்க்கும் பொருந்தாது. மற்ற ஊர்களிலும் நன்கொடை தண்டுவது

அரிய செயலே! தட்டுகளுக்காக உருபாய் மூன்றும், குவளைக்காக உருபாய் ஒன்றும் வழங்கப்படுகிறது. ஏனங்கள் வாங்க ஒருமாண வனுக்கு உருபாய் மூன்றுமேனி வழங்கப்படுகிறது. பெரிய அளவில் சமையல் செய்யும் அளவுக்கு ஏனங்கள் வாங்க அத் தொகையும் பற்ருது.

உணவு வழங்கும் நாள்கள்: முந்திய நண்பகல் உணவுத் திட்டத்தில் ஆண்டுக்கு 200 நாள்களுக்கு மட்டுமே உணவு வழங்கப் பட்டது. தற்போது ஆண்டுமுழுவதும் வழங்கும்படி அரசு பணித்துள்ளது. இதனல் மிகுந்த தொல்லை ஏற்படுகிறது. தலைமையாசிரியர் விடுமுறை நாள்களில் எங்கும் செல்ல இயலாது. சில பள்ளிகளில் முறைவைத்து, ஆசிரியர்கள் விடுமுறை நாள்களில் மேற்பார்வை இடுகிருர்கள். எனினும் பொறுப்பு தலைமையாசிரியர்க்கே.

வேலைப்பளு: இந்தத் திட்டத்தால் தலைமையாசிரியர்களுக்கு வேலைப்பளு மிகுந்துள்ளது. 11 பதிவேடுகளும், இருபடிவங்களும் நிரப்பி, அன்றன்று எழுதப்பட வேண்டும். நுகர்பொருள் நிறுவனத்துக்குத் தேவைப் பட்டியல் அவ்வப்போது அனுப்ப வேண்டும். பெற்ற பொருள்களின் விளத்தங்கள் அடங்கிய படிவங்களைப் பள்ளித்துணை ஆய்வருக்கும், உதவிக்கல்வி அலுவலருக்கும் அனுப்ப வேண்டும். மளிகை, விறகு, காய்கறி வாங்கி அணியமாக்க வேண்டும். சமைப்பவருக்கு உரிய பொருள்களை அளந்து கொடுக்க வேண்டும். மேற்பார்வையிட வேண்டும். இவ்வளவு வேலைப்பளு இருந்தும், அரசு இந்தப் பணிக்கென எந்த வகைக் கூடுதல்படியோ, விடுப்புச்சலுகையோ இதுவரை அளிக்கவில்லை.

ஊட்டவுணவுக் குழுவும்—பிற கண்காணிப்பாளர்களும்: ஊட்டவுணவுத் திட்டத்துக்கு ஊர்ப்பொது மக்களில் முகாமை யானவர் ஐவரை உறுப்பினர்களாக்க வேண்டும். தலைவர், பொருளாளர் அவர்களே. ஆசிரியர்களும் ஐவர் இருப்பார்கள். குழுவினரின் தலையீடு இப்போது மிகுதியாகிறது. அரசியல் கட்சியினர் மேலாண்மை செலுத்துகின்றனர். அரசின் உயர்மட்ட அலுவலர் களும் திடீர் திடீரென்று பார்வையிட வருகின்றனர். இதனல் பணிகளும் தடைப்படுகின்றன; பயிற்றலும் தடைப்படுகிறது.

பயிற்றலைக் கெடுக்கும் பிறபணிகள்: பயிற்றற் பணியைத்தவிரப் பிற பணிகளுக்கும் ஆசிரியர்கள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின் றனர். புள்ளி விளத்தம் (ஆடு மாடுகள், கோழிகள், மாந்தர்), குடிக்கணக்கு, பங்கீட்டு அட்டை வழங்குவதற்குரிய கணக்கெடுப்பு, ஒப்போலையாளர் பதிவு, தேர்தல், குடும்பக்கட்டுப்பாடு (இப்போது கட்டாயம் இல்லை), ஊனமுற்றேர் கணக்கெடுப்பு, கைத்தறிக்கணக்கு

கண்ணகி வழக்குரை

(1976-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் மட்டக்களப்பில் நடந்த அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளை தமிழாராய்ச்சி யாநாடு நடத்தியது. அதில் பண்டிதர் **வி. சி. கந்தையா** அவர்களால் படிக்கப் பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரை பற்றிய விளக்கம் இது. 'இலங்கை மட்டக்களப்பு தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் மதிப்பீடு' — என்னும், நூலிலிருந்து எடுக்கப் பெற்றது. நூலாசிரியர் தவத்திரு. **வே. அந்தனிசாள் அழகரசன்.** க. மு. அவர்களாவார்.)

கண்ணகி வழக்குரை என்ற பெயரால் இலங்கை மட்டக்களப்புச் சிற்றூர்கள் பலவற்றிலும், பழைய ஏட்டுருவில் நீண்ட காலமாக ஒரு நூல் வழங்கி வருகிறது. விடை மாத வளர்மதி நாட்களில் இங்குள்ள கண்ணகை அம்மன் கோயில்கள் திறக்கப் பெற்றுச் சடங்கும், முழுநிலா நாளன்று குளுத்தி (குளிர்ச்சி)யும் நடை பெறுவது வழக்கம். அக்காலங்களில் இவ்வேடு இடைவிடாது தொடர்ந்து படிக்கப் பெறும். கண்ணகி கோவலன் வரலாற்றினைச் சிலப்பதிகாரத்துடன் ஓரளவு தழுவியும், விலகியும், கூறும் இக் கதை நூல் ''வழக்குரை காவியம்'' என்றும், ''வழக்குரை'' என்றும் கூறப்படுவதுண்டு. கண்ணகி வழக்குரை

(மூன் பக்கத் தொடர்ச்சி)

எடுப்பு-இப்படிக் கணக்கெடுப்புகளுக்குக் கணக்கேயில்லை. இவை யெல்லாம் பள்ளியில் பயிற்றுவிக்கும் பணியைக் கட்டாயம் தாக்குகின்றன.

தட்டு—குவளை-வழங்குதல் : வாங்கப்பட்டுள்ள தட்டுகள், குவளை களை மாணவர்களின் வரிசைப்படி, எண்ணிட்டு அவ்வாறே உரிய வர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது. அவ்வாறு வழங்குதற்கு நீண்டநேரமும் மிகுந்த தொல்லையும் ஏற்படுகின்றன. அவற்றை, மாணவர்கள் உண்டபின் திரும்பப் பெற்றுக் கழுவித் துடைக்கப் போதிய நீர் வேண்டியுள்ளது. பல பள்ளிகளில் நீர் கிடைப்பதற் கான வழிவகைகள் செய்யப்படவில்லை.

தற்போதைய நிலை : இத் திட்டத்தில் தலைமையாசிரியர்க்கு, உதவி யாக 31000 தமிழாசிரியர்கள் பகுதி நேரப் பணியில் அமர்த்தப்பெற இருப்பதாக அறிவித்துள்ளனர். அவ்வாறு செய்யின், வேலைப்பளு குறைந்து, திட்டம் சிறப்பாகச் செயல்பட இயலும் என நம்பலாம்.

முடிவுரை : மொத்தத்தில், குறைகள் களையப்பட்டுத் தலைமை யாசிரியர்களுக்கு வேலைப்பளுவும் குறைக்கப்பட்டால், ஊட்டவுண வுத் திட்டம் ஒருவாறு ஊட்டமான திட்டம் எனக் கூறலாம். O

நூல் ஓரளவு சிலப்பதிகாரத்தினை ஒத்த இலக்கியம் என்றே கருதுவர் அறிஞர் பெருமக்கள். பழங்காலச் செய்திகளைக் கொண்டு எழுந்த இடைக்கால இலக்கியம் இஃது என்கிறார் புலவர் கந்தையா அவர்கள். சிலப்பதிகாரம் மாந்தப் பெண்ணைத் தெய்வமகளாகச் செய்து நிற்கக் கண்ணகி வழக்குரையோ, தெய்வமகளை மாந்தப் பெண்ணாகக் காட்டிச் செல்கின்றது. தெய்வ மாங்கனி ஒன்றே கண்ணகியாக மாறிற்றென்ற செய்தி ஒன்று. அம்மன் பிறந்த காதைப் பகுதியில் இதனை அறியலாம். மாந்தன் தெய்வமாதலும், தெய்வம் மாந்தனாதலும் கிழக்கு நாட்டுச் சமய மெய்ப்பொருளியலில் உயிர் நாடியாமென்பதை இது நமக்குக் காட்டுகின்றது. சிலம்பு காரணமாக விளைந்த கதையிது. ஆதலால், சிலப்பதிகாரம் என இளங்கோ அடிகளார் தம் நூலுக்குப் பெயரிட்டார். ஆனாலும் கண்ணகிதேவி செய்த "தோலா" வழக்கே பெண்ணடிமை மீட்சி, கற்பின் மாட்சி ஆகிய பழந்தமிழ்ப் பண்புகளுக்கெல்லாம் உயர்வு தந்து கண்ணகி காதைக்கு ஆணி வேராகத் தமிழகத்துக்கும், கற்பு நெறிக்கும் புகழ் ஊட்டிற்றென்று கொண்டு, கண்ணகி வழக்குரை எனத் தம் நூலுக்கு இதன் ஆசிரியர் பெயர் சூட்டினர். கண்ணகி உரைத்த வழக்கும் இந்நூல் வழக்குரைத்த காதையின் சிலப்பதிகாரத்தை விடச் சற்று விரிவாக இருக்கக் காணலாம். அது மட்டுமன்றிக் கோவலனைக் கொலைக் களத்துக்குக் கொண்டு செல்லு முன் பாண்டிய மன்னன் சிலம்பு தன்னுடையதுதானா என்பதைத் தன் மனைவியிடம் அறியப் பொற்கொல்லரை விடுத்து உசாவிய பின்னரே கொலைத்தீர்ப்பிட்டான் என்றும் கொலைக்களக்காதையில் அறிகின்றோம். இதனுள் பொற்கொல்லருடைய சூழ்ச்சி மிக விரிவாகக் காட்டவும் பெறுகின்றது. கண்ணகி தேவியின் காற்சிலம்புகளுக்குப் பரல் தேடிய செய்தி மீகாமன் கதை, துரியோட்டு, கப்பல் வைத்தல், வெடியரசன் போர், வீரநாரணன் கதை, மணி வாங்கின கதை, விளந் தேவன் போர் ஆகிய ஏழு கதைகளில் ஏறத்தாழ 650 செய்யுள்களால் விரிவாகக் கூறப்படுதல் சிலப்பதிகாரத்தில் முற்றிலும் இல்லாத ஒரு பெரிய நிகழ்ச்சியாகும். இப்பகுதி முழுவதும் தென்னகத்துக்கும், ஈழத்துக்கும் பண்டு தொட்டு இருந்த கடற் போக்குவரத்து, வாணிபத் தொடர்பு, சமய உறவு, அரசியல் நட்பு முதலான பலவற்றை உள்ளடக்கிக் காட்டுகின்றது. இங்கே வரும் 'கப்பல் வைத்தல்' என்னும் பகுதி, பழந்தமிழருக்குத் தெரிந்திருந்த கப்பல் கட்டும் தொழிலின் நுணுக்கம் அனைத்தையும் அழியாமல் பாதுகாத்து வைக்கும் கருவூலம் போன்றது. மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ்ச் சொற்களும், தொடர்களும் பல காணப்படுகின்றன. அடசுதல், அடிச் செழிப்பினற்போல, கழிசறை, கிளப்பிவிடல், செம்முதல், வாண்டிச்சைப்பட்டிருத்தல், விடுப்புண்ணுதல் போன்றவை. 'பொன்னுக்கு மறிப்பு' என்ற கதைப்பகுதியும் விலைமகள் உலகைப் படம்பிடித்தும் காட்டுவதாகும்.

அரபு நாட்டுக்கு அனுப்புக!

(அரசுக்கு வேண்டுகோள்) —தமிழம். செம்பியன்

அரபு நாட்டின் அரசில் மக்கள்
முரசும் முழவும் ஆர்த்து முழங்க,
செல்வச் செழிப்பின் உச்சிக் கொம்பில்
வெல்லும் பகையிலா திருமாப் போடு,
வாழ்ந்தும் அங்கே மழையே யில்லை!
ஆழ்ந்த ஆர்வம் உந்துத லாலே,
பம்பாய் நகர்க்கவர் பறந்துமே வந்து,
தெம்பாய் மழையது தேனைப் பொழியும்,
திகட்டா அழகினைச் சிமிழ்க்கா இமையுடன்
அகமகிழ் வுற்றுக் கண்டுமே களிப்பர்!
"அல்லா" அருள்தனை ஆங்குள "முசுலீம்"
இல்லா தொழிந்தனர் என்னல் தகுமோ?

"வருகநன் மழையே! வருக!" எனஈங்
கிருக்கும் "இசுலாம்" தோழர் பலரும்,
சென்னை நகரின் சீர்மிகு "மரீனா"
பொன்மணற் பரப்பில் பொலிவுடன் அமர்ந்து,
வழுத்தியே தொழுகை தோதுடன் நடத்தினர்!

அழுகைநம் நெஞ்சில் அரும்பும் தன்மையில்
"குன்னக் குடி"யும் செங்குன் றத்தின்,
நன்னீர் ஏரியில் நடுக்கால் நனைத்தே,
யாழினைக் கொண்டே ஏழிசை சேர்த்தே,

(முன் பக்கத் தொடர்ச்சி)

கண்ணகி வழக்குரை நூலை எழுதியவர் காங்கேசன் என்பர். இக் காங்கேசன் என்னும் பெயரோடு தொடர்புற்ற செய்தி ஒன்று சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லாரது உரையுடன் சேர்ந்து வழங்குவதாக இருப்பதையும் நாம் அறியலாகும்.

"காற்றைப் பிடித்துக் கடத்தில் அடைத்துக் கடியபெருங்
கூற்றைத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கேயர் கோனளித்த
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை செய்வித்ததே
சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை செய்வித்ததே!

இதனாற் பொப்பண்ண காங்கேயர்கோன் என்னும் வள்ளல் அடியார்க்கு நல்லாரைக் கொண்டு சிலப்பதிகாரத்துக்கு உரை செய்வித்தாரென்பது தெளியலாகும். அடியார்க்கு நல்லார் காலமும், கண்ணகி வழக்குரைத்த காலமும் ஒன்றுயிருக்கலாம் என்று கொள்ளலும் கூடும். O

பாழிசேர் பாடலால் பராவினர் என்பர்!
எழுபது நிமையம் இசைத்த இசைப்பில்,
பழுதிலா மக்கள் பிணிக்கப் பட்டனர்!

கனிவுடன் மயிலைக் "கபாலி"க் கோயிலில்,
தனிவழி பாடும் தகவுடன் நடந்ததாம்!

வடபுல வாணிகர் வளமுடன் வாழும்,
வடசென் னையிலே "வரதா முத்தி
யப்பன்" தெருவில் ஆண்டாள் "பாசுரம்"
செப்பமாய்ச் சிறப்புடன் பாடப் பட்டதாம்!

இராப்பக லாயிந் நாட்டிற் குழைக்கும்(?)
இராகவா னந்தம் என்னும் அமைச்சர்,
குன்னக் குடியின் மெல்லிசைக் கூத்தில்,
இன்னரும் பங்கேற் றினிதே நடித்துளார்!

மதச்சார் பற்றநம் இந்திய மண்ணில்,
பதமாய் நச்சுக் கருத்தினைப் பரப்பும்,
இந்து* நாளிதழ் இந்தச் செய்தியைத்,
தந்திர மாய்த்தன் தலைப்பில் படத்துடன்,
கட்டம் கட்டி வெளியிட் டுளதே!
தட்டிக் கேட்கஓர் தாளிகை இலையே!

தொலைக்காட் சியுமிம் மாபெருங் கூத்தினை
அலைபரப் பிற்றும் அனைவருங் களிக்க!

இந்தக் கூத்தில் நந்தமி ழரசுக்
கெந்த வகையிலும் ஏற்றவோர் இடமுண்
டென்பது தெற்றெனத் தெரிதலால் ஈங்கிது
இன்றே தில்லியின் அரசுக் கெனஓர்,
பரிந்துரை செய்தே கூத்தில் பங்கினைப்
பரிவுடன் ஏற்ற "பரிவா ரங்களை"
அயல்நா டான அரபுக் கனுப்ப,
முயற்சிமேற் கொள்ளல் முறையுடை செயலாம்!

இத்தகு செயலால், இன்னரும் முயல்வால்,
மெத்தநல் மழையே பொழியுமந் நாட்டில்!
அரபுப் பணமும் அளவில் லாமல்
வரவழி வகுக்கும்! மதச்சார் பற்றநம்
நாடுமுன் னேறும் நலமுடன்,
வாடும் மக்களும் வளம்பெறு வாரே!

---

* 11-10-82-ஆம் நாள் இந்து

வேறென்ன சொல்வது?

1) தமிழக இந்திரா பேராயக் கட்சி கலைப்பு ! பெரிய குளம் தேர்தல் தோல்வி எதிரொலி !

— செய்தி

தமிழகத்தில் தேசியத் திருட்டு வேலை என்றுமே வெற்றி பெற முடியாது என்பதற்கு இதை விட வேறு சான்று தேவையில்லை.

2) ஒப்போலைப் பெட்டியில் உருபாத் தாள்கள் ! —செய்தி

பின்னே, இந்தியாவில் அதற்கும் இதற்கும் வேறுபாடு என்ன உள்ளது ?

4) இசுரேல் படைத்துறையினர் பாலத்தீன் ஏதிலியர் அடைவகங்களிலும், மருத்துவ மனைகளிலும் புகுந்து 3 ஆயிரத்து 200 பேர்களைக் கொன்று குவித்தனர்; செவிலியர்களைக் கற்பழித்தனர் !

— **அரசபத்து** —செய்தி.

படைத்துறையினரின் இயல்பான அழிப்புகளில் இச் செயல்களும் உள்ளடங்கியனதாம் ! எந்த நாட்டுப் படையினர் இதற்கு நெறிவிலக்காக உள்ளனர் ?

5) ஆசியப் போட்டியில் பங்கு பெறும் பெண்கள் பற்றி, உறுதியாக அவர்கள் பெண்களா ஆண்களா என்று ஆய்வு நடத்த வேண்டும். — ஆசிய விளையாட்டு மேலாளர். **மில்காசிங்.**

அவர்கள் பெண்களாகத் தாம் பிறந்திருக்க வேண்டும் ! விளையாட விளையாட ஆண்களாக மாறியிருப்பார்கள் ! என்ன செய்வது ?

11) தஞ்சை அரசர் 'மிராசுதார்' அரசினர் மருத்துவ மனையில் கருப்பப் பெண் ஒருத்திக்கு வலிப்புத் தடுப்பு ஊசி போட்ட பின் வலிப்பு வந்து மாண்டார்.-**செய்தி**

அந்தப் பெண் கட்டாயம் ஒரு பணக்காரப் பெண்ணாக இருந்திருக்க முடியாது !

1) இவ்வாண்டு திசம்பருக்குள் முழுமையாக ஊட்டவுணவு வேலையிலிருந்து பள்ளி ஆசிரியர்களை அரசு விடுவிக்காமற்போனால், 1983 சனவரி முதல்நாளிலிருந்து, அவ்வேலைகளை ஆசிரியர்கள் செய்யமாட்டார்கள்.

—தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி எச்சரிக்கை.

அவர்களை அரசு அவ்வளவு விரைவில் விடுவிக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஏனெனில் இந்த அரசுக்குக்கல்வியைப் பற்றியிருக்கும் கவலையை விட, ஊட்டவுணவு பற்றிய கவலை மிகுதியாயிருக்கிறதே!

2) 8-ஆவது வகுப்புவரை இறுதித் தேர்வை ஒழிக்கும்படி அனைத்துப் பள்ளிகளுக்கும் நடுவணரசு கருத்துக் கூறி உள்ளது —**செய்தி**

ஏனெனில், சட்டமன்ற உறுப்பினர்களாவதற்கு அந்தக் கல்வியேபோதுமானதன்றோ? அதில் தவறிப் போனால் பலபேர் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆவது எப்படி?

3) கட்சி மாறினால் சட்டமன்ற, பாராளுமன்றப் பதவிகளைப் பறிக்கும்படி, தேர்தல் ஆணைக்குழு செய்த பரிந்துரையை நடுவணரசு **ஆய்ந்து** தக்க சட்டம் கொண்டு வரும். —சட்ட அமைச்சர் **கவுசல்**

அந்தச் சட்டம் கொண்டு வருவதால் ஆளுங்கட்சிக்கு ஏதாவது இழப்பு வருமா என்பதைக் கண்டு பிடிக்கவே அந்த ஆய்வு!

4) தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள நீர்ப்பஞ்சத்தைக் கழிவறையில் பயன்படுத்தும் தண்ணீரைக் கொண்டு தீர்க்கலாம்.

—ம **கோ. இரா.** கருத்து.

ஆனால் அமைச்சர்கள் வீடுகளில் அத்தகைய தண்ணீர்த் தட்டுப்பாடு வருவதற்கு இடமில்லை!

5) ஒரு கையில் மண்டை ஓட்டையும் மறுகையில் வெட்டுக்கத்தியையும் தூக்கிக் கொண்டு ஆடுவதற்கு இட்ட தடையை நீக்கக் கோரி உயர் மீமிசை மன்றத்தில் ஆனந்த மார்க்கம் கோரிக்கை. —செய்தி

அப்படித் தடை போட்டால் சிவதாண்டவத்தையே அரசு அவமதிப்பதாகும் என்று அவர்கள் தருக்கமிடலாம்.

6) இடைக்காலத் தேர்தல் ஒன்றின் மூலம் ராசீவ் காந்தியை முதலமைச்சர் பதவியில் அமர்த்த இந்திராகாந்தி எல்லா வகையிலும் முயன்று வருகிறார்!

—பாரதிய சனதா கட்சியின்
பொதுச் செயலாளர்
எல்.கே. அத்வானி

சொல்லலாம்! ஆனால் தடுக்க முடியாதே!

7) சென்னை உயர்நெறி மன்றத்தில் தீர்வு செய்யப் பெறுமல் பத்தாயிரம் உரிமை வழக்குகள் தேக்கமுற்றிருக்கின்றன.

—சென்னை உயர்நெறி மன்ற
நடுவர் **கே பி என். சிங்.**

இந்த நாட்டில் தேக்கமுறாத துறைதான் என்ன இருக்கிறது?

8) ஆந்திரம், தமிழ்நாடு பஞ்சாப் போன்ற மாநிலங்களில் செயல்படும் வட்டாரக் கட்சிகள் மக்கள் மனத்தில் குறுகிய மனப்பான்மையைத் தோற்றுவித்து வருகின்றன. ஒருமைப் பாட்டுணர்வை அக் கட்சிகள் சீர்குலைத்து வருகின்றன.

—அனைத்திந்திய இந்திரா பேராயப் பொதுச் செயலாளர் **சத்திய நாராயண இராவ்** —ஐதராபாத் கூட்டத்தின் பேச்சு.

9) சோவியத்து நாட்டில் மக்களின் வருவாய் பெருகியிருக்கிறது. ஆனால் விலைவாசியில் ஏற்றம் இல்லை. வீட்டு வாடகை கடந்த 54 ஆண்டுகளுக்கு முன் எப்படியிருந்ததோ அதேபடிதான் இப்பொழுதும் உள்ளது. மின்சாரக் கட்டணம், தொடர்வண்டி, பேருந்துக் கட்டணங்கள் போன்றவை கடந்த 34 ஆண்டுகளில் உயர்த்தப் படவில்லை. கோதுமை மாவு, அரிசி, சருக்கரை, கோதுமை வறட்டி, காய்கறிகள் போன்றவற்றின் விலை கடந்த 30 ஆண்டுகளாக உயர்த்தப் படவில்லை. இறைச்சி, பால், பாலாடைக் கட்டி மற்றும் அவை தொடர்பான உணவுப் பொருட்களின் விலை 20 ஆண்டுகளாக உயராமல் இருக்கிறது.

மக்கள் குரல் 5-10-82

10. நடுவில் கொடிகட்டிப் பறக்கும் ஓர் அனைத்திந்தியக் கட்சி பொறுப்புத்தொகையை இழந்தது என்றால், இம் மாபெரும் தேசியக்கட்சிக்கு மாபெரும் அவமானம் ஏற்பட்டிருக்கிறது என்றால், அதற்குக் காரணம் எம்.பி. சுப்பிரமணியந்தான்! ஐயமே இல்லை.

—**ஆனந்தவிகடன்** 10-10-82

அனைத்திந்தியக் கட்சி என்று பெயர் வைத்திருப்பதே ஒரு கட்சிக்குத் தகுதியாகிவிட முடியுமா என்ன?

இங்குமட்டுமென்ன? மக்களின் மூடநம்பிக்கைகள், முதலாளியச் சுரண்டல்கள், சாதி, மதக் கொடுமைகள், பெண்ணடிமை, பார்ப்பனிய ஆளுமை-முதலியன அன்று இருந்த நிலையிலேயே அப்படியேதானே இருக்கின்றன!

அப்படியானால், ஒருவேளை அது வெற்றி பெற்றிருந்தால், அதற்கும் காரணம் எம்.பி.எசு. ஆகத்தானே இருக்க முடியும். அவ்வாறானால், அனைத்து இந்தியக் கட்சி என்பதிலோ அதன் தலைவர் இந்திராகாந்தி என்பதிலோ ஒரு மண்ணாங்கட்டிப் பெருமையும் இல்லை என்றுதானே ஆகிறது!

எரிபொருள்கள் (FUELS) — பர். ஆறிறைவன்.

பழந்தமிழக வரலாற்றுக்கும் இன்றைய நிலைக்கும் உள்ள பல முரண்பாடுகள் வெளிப்படையானவை. மொழியியல், கலை, பண்பாடு, பொருளியல் அனைத்திலும் உயர்ந்திருந்த தமிழகம் இன்று இல்லை. அன்றைய வளநிலை மீண்டும் தமிழகத்தில் புதுமைப் பொலிவுடன் விளங்க வேண்டுமென்று எண்ணும் அறிவார்ந்த நெஞ்சங்கள் பல. அவ்வாறு தோன்றுகின்ற வேட்கையுடன், தமிழ் மக்களை எதிர் நோக்கியுள்ள பல சிக்கல்களும் கண் முன் வருகின்றன. முதலில் மக்களை இச் சிக்கல்கள் பற்றி அறிய வைப்பதும், அவற்றைப் போக்குவதற்கான சிந்தனைகளையும் முயற்சிகளுக்கான நம்பிக்கையையும் வளர்ப்பதும் பெருங்கடமையாகும்.

வளரும் நாடுகளுக்கே உரிய பொருளியல் தடைகள் நமது நாட்டிலும் உள்ளன. இன்றைய நிலையில், தொழில் வளர்ச்சி, வேளாண்மை, போக்குவரத்து ஆகியவை பொருளியல் முன்னேற்றத்துக்கு அடிப்படையானவை. பெரும்பாலான இயக்கங்கள் கருவிகள் அல்லது எந்திரங்களைச் சார்ந்துள்ளன. விலங்குகளின் ஆற்றலும் மாந்தனின் தசை ஆற்றலும் (Muscle power) ஓரளவு தான் பயன்தர முடியும். எந்திர இயக்கங்களுக்குத் தேவையானவை வெப்ப ஆற்றலும் மின்னாற்றலுமே ஆகும். இவ்வாற்றல்களைக் கரிம ஆற்றல் மூலங்களான நிலக்கரி (Coal), கன்னெய் (Petrol), இயற்கை எரிவளி (Natural gas) ஆகியவற்றிலிருந்து பெறுகிறோம். உலகநாடுகள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட பொருள்களிலிருந்துதான் பெரும்பாலான ஆற்றலைப் பெறுகின்றன. புதியதாகிய 'அணுவாற்றல்' (Atomic Energy) இன்னும் மிகக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப் படுகின்றது.

கரிம ஆற்றல் மூலங்கள் எல்லா நாடுகளிலும் பரவலாகக் காணப்பட்டாலும் ஒருசில நாடுகளில் மட்டுமே மிகுந்த அளவில் கிடைக்கின்றன. குறிப்பாக, கன்னெய் வளம் மிகவும் சில நாடுகளில் மட்டுமே காணப்படுகின்றது. ஒரு நாடு வளர்வதற்கு இயற்கையாகவே ஆற்றல் மூலங்கள் அந்நாட்டில் கிடைக்க வேண்டும் அல்லது வேறு நாடுகளிலிருந்து வாங்குவதற்கேற்ற செல்வ வளம் பெற்றிருக்க வேண்டும். பெரும்பாலான வளரும் நாடுகளின் நிலை அவ்வாறில்லை. இயற்கை வளமின்மை, மக்கள் தொகைப் பெருக்கம், பொருளியல் திட்டச் சீர்கேடுகள் ஆகியவற்றால் தன்னிறைவு அல்லது தற்சார்பு (Self dependence) அடைய இயலாமல் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. வளரும் நாடுகள் தம் அறிவியல், தொழில், வளர்ச்சிகளைத் தடையின்றிப் பெற வேண்டுமெனில் எரிபொருள் அல்லது ஆற்றல் தேவைகளில் தன்னிறைவு பெறவேண்டும். மேலும், நிலத்தினடியிலிருந்து கிடைக்கும் கன்னெய், எரிவளி, ஆகியவை இன்னும் ஏறக்குறைய 100-200 ஆண்டுகளுக்குள் தீர்ந்துவிடும் என்று வல்லுநர்கள்

கணக்கிட்டுள்ளனர். எண்ணெய் வள நாடுகள் தந்நல நோக்கங்களால் ஒத்துழையாமலும் போகலாம். எல்லா நிலைகளிலும் அதிக நெருக்கடிகளுக்குள்ளாவது பின்தங்கிய அல்லது வளரும் நாடுகளே.

இவ்வாறான கரணியங்களால்தாம் இன்று எல்லா நாடுகளிலும் புதிய ஆற்றல் மூலங்களைக் கண்டு பிடிக்கவும், பயன்படுத்தவும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய ஆற்றல் மூலங்கள் அல்லது எரி பொருட்கள் அந்தந்த நாட்டிலேயே கிடைப்பனவாகவும், நெடுங்காலத்துக்குக்கிடைப்பனவாகவும் இருக்க வேண்டும். புதிய நீர்த் தேக்கங்களை உருவாக்குதல், வேளாண்மைக் கழிவுப் பொருள்களை உயிர் வேதியல் முறைப்படி (Biochemical methcd) எரிவளியாக மாற்றுதல் (Biogas), காற்றின் விசையை மின்சாரமாக மாற்றுதல், கதிரவனின் ஒளியையும் வெப்பத்தையும் மின்சாரமாக மாற்றுதல் ஆகிய பல வழிகள் கண்டுபிடிக்கப்பட்டு ஆராயப்படுகின்றன. இவற்றில் வேளாண்மைக் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி எரிவளி (Biogas) உருவாக்கம் செய்யும் முறை பரவலாக்கப்பட்டு வருகின்றது. சிறு அளவில் எரிபொருள் தேவையை இம்முறை நிறைவு செய்யும். பரவலாக எல்லா இடங்களிலும் கிடைக்கும் சூரியக் கதிராற்றலை (Solar energy) மாற்றும் முறைகள் இன்னும் எளியனவாகவோ அல்லது மலிவானவையாகவோ இல்லை. கதிரொளியைப் பயன்படுத்துவதற்கு இன்னும் சில ஆண்டுகளாவது ஆகும். கதிரொளியை மின்னாற்றலாக மாற்றும் முறையொன்றே 'ஆற்றல்' பஞ்சத்தை முழுமையாகத் தீர்க்கும் என்று அறிஞர்கள் நம்புகின்றனர்.

தமிழ் நாட்டின் இன்றைய நிலையில், இச் சிந்தனைகள் மக்களிடம் பரவுதல் மிகவும் தேவை. தற்போதைய வறட்சி நிலையை அரைப் பாலைநில நிலை (Semi arid condition) என வானிலை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். காவிரிநீர் சிக்கலுக்குள்ளாகிவிட்ட நிலையிலும், பெரும்பாலான பகுதிகள் மழையை நம்பியுள்ள நிலையிலும் எதிர்காலம் பற்றிய நோக்கும் முயற்சியும் தெளிவாக இருத்தல் வேண்டும். உடனடியாக எவ்வகைத் தீர்வும் காண இயலாது எனினும் எதிர்காலத்தை நோக்கியும், மற்ற நாடுகளோடு ஒப்பிட்டும், பல புதுத்துறைகளிலும் முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும். இடைக் காலத்தில் 'சிக்கன முறை' (Conservation) மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆனால், மேல்நாடுகளில் வாழும் மக்கள் செலவிடுவதில் நூற்றில் ஒரு பங்கு எரிபொருளையே நம் மக்கள் சராசரியாகப் பெறுகின்றனர். எனவே, 'சிக்கனம்' என்பதும் இயலாதது என்றாகிவிடும். கிடைக்கின்ற அனைத்துப் பொருட்களையும் வீணாக்காமல் தகுந்த முறையில் பயன்படுத்த ஏற்ற வழிகளை மக்களுக்கு உணர்த்த வேண்டும். அண்டை அயல் மாநிலங்களை நம்பித்தான் வாழவேண்டுமென்ற 'இயலாமை' உணர்வை அகற்றுவதற்குத் 'தன்னிறைவு' நோக்கில் மக்களைத் தூண்ட வேண்டும். O

குணவீரரின் நேமிநாதம்.

புலவர். தி. நா. அறிவுஒளி. க.மு; கல், இ.

முன்னுரை : தமிழ்மொழியில் எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி என்னும் ஐவகையாக இலக்கணம் ஆராயப்படும்.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூவகையுள்ளேயே ஐவகையையும் ஆராய்ந்துள்ளது.

தமிழில் பல இலக்கண நூல்கள் வழங்குகின்றன. அவற்றுள் நேமிநாதமும் ஒன்று. இதைச் 'சின்னூல்' என்பர். பவணந்தியாரின் நன்னூல் தோன்றுவதற்கு முன்னர் மாணாக்கர் சின்னூலையே கற்றனர். பிறகே தொல்காப்பியம் முதலியவற்றைக் கற்பர்.

இலக்கண ஆசிரியர் குணவீர பண்டிதர் : நேமிநாதத்தின் (சின்னூலின்) ஆசிரியர் குணவீர பண்டிதர் ஆவார். இவர் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள களந்தை என்னும் ஊரினர். [1] இவர் வச்சணந்தி மாலை (வெண்பாப் பட்டியல்) என்னும் யாப்பிலக்கண நூலையும் இயற்றியுள்ளார். [2]

நேமிநாதமும் வெண்பாவால் இயன்ற நூல்; வச்சணந்தி மாலையும் வெண்பாவால் ஆனநூல். இவ்விரு நூல்களையும் நோக்குங்கால், ஐந்திலக்கணக்களையும் வெண்பாவால் மாணுக்கருக்கு உதவியாகச் செய்தளிக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் குணவீரர் இவ்விரு நூல்களை மட்டும் செய்து முடித்தார் போலும் எனக் கருதத் தோன்றுகிறது.

நூலமைப்பு : குணவீரர் சமண சமயத்தினர்; திரிபுவனதேவன் (குலோத்துங்க சோழன்) என்னுஞ் சோழன் காலத்தினர்.

நேமிநாதம் நேரிசை வெண்பா யாப்பினுல் அமைந்த இலக்கணமாகும். இதில் 97 வெண்பாக்கள் உள.

---

1. தன்னூர்ச் சனகையிற் சன்மதி மாமுனி தந்தமைந்தன்
நன்னூல் உரைத்த பவணந்தி மாமுனி நற்பதியும்
சின்னூல் உரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும்
மன்னூ புரத்திரு அன்னமின் னேதொண்டை மண்டலமே
(தொண்டை மண்டலசதகம்: 32)

2. "இந்நூல் செய்தார் யாரோ எனின்,
உளமலி பேரருள் உயிர்மிசை வைத்த
வளமலி களந்தை வச்சணந்தி முனிவரன்
கொள்கையின் வழாஅக் **குணவீர பண்டிதன்**
"கற்றவர் புகழும் களந்தையென் பெரும்பதி
குற்றமில் வாய்மைக் **குணவீர பண்டிதன்...**'

பாயிரம் : 2 வெண்பாக்கள்
எழுத்ததிகாரம் : 24 ,,
சொல்லதிகாரம் : 71 ,,

மிகப்பரந்துள்ள தமிழிலக்கணத்தை மிகச் சுருக்கமாக விளக்கும் ஆசிரியர் திறம் போற்றத் தக்கதாகும்.

வெண்பா யாப்பை மிக எளிமையாகவும் இனிமையாகவும் ஆசிரியர் குணவீரர் கையாண்டுள்ளார்.

தொல்காப்பியம், நன்னூல், இறையனூர் களவியல், யாப்பருங் கலம், நம்பி யகப்பொருள் முதலிய இலக்கண நூல்கள் 'நூற்பா' என்னும் யாப்பால் அமைந்துள்ளன.

இலக்கண நூல் வெண்பா யாப்பிலும் அமைவது மரபே எனத் தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர் கருதுகிறார். நேமிநாதமும் வெண்பாப் பாட்டியலும், அதற்கெடுத்துக்காட்டாக இருக்கின்றன. புறப்பொருள் வெண்பாமாலையின் மேற்கோள் பாக்கள் வெண்பாக்களாக உள. (சில மருட்பாக்களாகும்) தண்டி அணிநூல் மேற்கோள்களும் வெண்பாக்களே.

இந்நூலில் இருபத்தெட்டு வெண்பாக்கள் மகடூஉ முன்னிலையாய் உள்ளன. அமிதசாகரர் இயற்றிய யாப்பருங்கலக் காரிகை நூற்பாக்களும் மகடூஉ முன்னிலைப் பாடல்களே யாகும்.

அவையடக்கம் : நூலுக்கு 'அவையடக்கம்' பாடும் மரபு தமிழ் மரபு ஆகும். புலவோரின் தன்னடக்கப் பண்பாடும், செருக்கற்ற நாகரிகமும் இதனுல் புலப்படும். கல்வியிற் சிறந்த கம்பரும் கலை நலப் பெரியர் திருத்தக்க தேவரும் போல்வாரும் அவையடக்கம் பாடியுள்ளனர்.[3] அவையடக்கப் பாடலிலேயே தம் புலமை வன்மையைப் புலவோர் அமைத்துப் பாடுவர். குணவீரர் இலக்கிய நயத்தோடு அவையடக்கம் பாடியுள்ளார்.

---

3. "கற்பா லுமிழ்ந்த மணியுங்கழு வாது விட்டால்
நற்பா லழியு நகைவெண்மதி போனி றைந்த
சொற்பா லுமிழ்ந்த மறுவும் மதி யாற்க மூலவிப்
பொற்பா விழைத்துக் கொளற்பாலர் புலமை மிக்கார்"
(சிந்தாமணி)

"முந்நீர்ப் பிறந்த பவழத்தொடு சங்கு முத்தும்
அந் நீ ருவர்க்கு மெனின்யாரவை நீக்கு கிற்பார்
இந் நீர வென்சொற் டழுதா யினுங் கொள்ப வன்றே
பொய்ந் நீர வல்லாப் பொருளால்விண் புகுது மென்பார்
(சிந்தாமணி)

"கடல்நீர் உப்புச் சுவையுள்ளது. அதனால் அதைப் பருக வியலாது. அதே நீர் வெப்பத்தால் நீராவியாகி வானத்தைச் சேர்ந்து கருமுகிலாகி மழையாய்ப் பொழியுமாயின், அஃது 'அமிழ்தம்' எனப் போற்றப்படும் தண்ணீராகிப் பயனளிக்கும். அதுபோல நான் உரைத்த புன்சொல்லான சின்னூலும் நல்லார்பால் சேர்ந்தால் அதனை 'நல்லது' எனக் கொள்வார்கள்" என்பது குணவீரரின் அவையடக்கமாகும்.[1]

எழுத்ததிகாரம் : உயிர், மெய், ஆய்தம், ஆகிய எழுத்துகளின் பெயர், தொகை, முறை ஆகியவற்றைத் தொகுத்து முதல் வெண் பாவிற் கூறுகிறார் புலவர்.

உயிரெழுத்து பன்னிரண்டு; குறில் எழுத்து அ இ உ எ ஒ என்னும் ஐந்து; நெடிலெழுத்து ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் ஏழு; மெய்யெழுத்து பதினெட்டு; அவற்றுள் வல்லினம் ஆறு; க ச ட த ப ற; மெல்லினம் ஆறு : ங ஞ ண ந ம ன; இடையினம் ஆறு : ய ர ல வ ழ ள என்பனவாகும் என்பதை,

"ஆன்றஉயிர் ஈராறும் ஐங்குறில் ஏழ்நெடிலாம்
ஏன்றமெய் மூவாறும் எண்ணுங்கால்—ஊன்றிய
வன்மையே மென்மை இடைமையாம் வாட்கண்ணாய்!
தொன்மை முயற்சியாற் றெக்கு" (நேமிநாதம்: 2) என

அழகிய பாவில் அமைத்துள்ளார்.

உயிர்மெய் 216 எழுத்துகள் என்பதை,

"ஓங்குயிர்கள் ஒன்றின்மேல் ஏறி உயிர்மெய்யாய்

ஆங்கிரு நூற்றெருபத் தாறுகும் ..." எனச் சுருக்கமாகக் கூறுகிறார்.

முத்துவீரப்ப ஆசிரியர் இயற்றிய முத்துவீரியத்தில், "உயிரே மெய் ஊர்ந்து உயிர்மெய்யாகும்" (மு.வீ. எழு : 24) எனமுத்து வீரியத்தில் சுருங்க விளக்குகிறார். தொல்காப்பியம் தெளிவும் விளக்கமும் அமைய,

"புள்ளி இல்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோடு உயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவுதிரிந்து உயிர்த்தலும்
ஆயீர் இயல உயிர்த்தல் ஆறே . . . ." (தொல் : 17)

---

[1] "உண்ண முடியாத ஓதநீர் வான்வாய்ப் பட்(டு)
எண்ண அமுதான தில்லையோ ?—மண்ணின்மேல்
நல்லாரைச் சேர்தலால் நான்சொன்ன **புன்சொல்லும்**
எல்லாருங் கைக்கொள்வர் ஈங்கு" (நேமிநாதம்)

"மெய்யின் வழியது உயிர் தோன்றும் நிலையே" (தொல்: 18) என உயிர்மெய்யின் முழு இலக்கணத்தை வரைவு செய்துள்ளார்.

"குறிலுக்கு ஒரு மாத்திரை, நெடிலுக்கு இருமாத்திரை, அளபெடைக்கு மூன்று மாத்திரை, மகரக் குறுக்கத்திற்கும் ஆய்தக் குறுக்கத்திற்கும் ஒரோவொன்று கால் மாத்திரை, உயிர்மெய்க்கு அவ்வுயிர் மெய்யிலுள்ள உயிரின் அளவே (குறில் உயிர்மெய்க்கு ஒரு மாத்திரை, நெடில் உயிர்மெய்க்கு (இருமாத்திரை) மெய்யெழுத்திற்கும், ஆய்தத்திற்கும், குற்றியலுகரத்திற்கும் (ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே) அரை மாத்திரை, ஐகாரக்குறுக்கத்திற்கும் ஒளகாரக் குறுக்கத்திற்கும் (தனித்தனி) ஒன்றரை மாத்திரையாகும் என்பதனை,

"குறில்நெடில்கள் ஒன்றிரண்டு மூன்றளவு, காலாம்
முறுகுமவ் வாய்தம் உயிர்மெய் —பெறுமுயிரே
மெய்யாய்தம் இஉக் குறுக்கம் அரை, பொன்மொழியாய்
ஐ ஔ அளவொன் றரை" (நேமி : 5)

எனமிகச் சுருங்க மொழிகிறார்.

புணர்ச்சியின் பொது இலக்கணத்தைத் திட்பநுட்பத்தோடு வரையறை செய்துள்ளார்.

"மெய்யீ றுயிரீ றுயிர்முதன் மெய்ம்முதலா
எய்தும் பெயர்வினையும் இவ்வகையே —செய்தமைத்தாற்
றோன்றல், திரிதல் கெடுதலெனத் தூமொழியாய்!
மூன்றென்ப சந்தி முடிவு" (நேமி : 12)

"மெய்யீறுய் மெய்ம் முதலாய் வருவன, மெய்யீறுய் உயிர் முதலாய் வருவன, உயிரீறுய் உயிர் முதலாய் வருவன, உயிரீறுய் மெய்ம் முதலாய் வருவன என்னும் இந் நால்வகைச் சொல்லும், பெயரீறுய்ப் பெயர் முதலாய் வருவன, பெயரீறுய் வினைமுதலாய் வருவன, வினையீறுய் வினை முதலாய் வருவன, வினையீறுய்ப் பெயர் முதலாய் வருவன என இப் பகுதியாற், பிரித்தால், எழுத்துத் தோன்றுதல் திரிதல், நீங்குதல் (கெடுதல்) என்னும் மூவகை டாய்ப் புணர்ச்சி முடிவுறும், என்கிறார் ஆசிரியர். (தொடரும்)

'தமிழ் நிலம்'

கிழமை இதழ் — சென்னை-5

1.	தனியிதழ்	விலை உரு. 0. 65
2.	ஆண்டுக் கட்டணம்	உரு. 36. 00
3.	அரையாண்டுக் கட்டணம்	உரு. 18. 00

ஓரிதழுக்கு உரு. 4.00 மேனி முன்பணம் கட்டும் முகவர்கள் எழுதிக் கேட்க.

தொடர்புக்கு : **தமிழ் நிலம், 5, அருணாசலத்தெரு, சென்னை-5.**

0 : 954 : பேரன்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, வணக்கம், கடையநல்லூரில், தங்கள் கருத்திற்கு நல்ல வரவேற்பு உள்ளது. அனைவரும் தங்களின் சொல்லாற்றலையும், மொழித் திறனையும், தமிழ் ஆய்வினையும், இனப்பற்றினையும் வெகுவாகப் பாராட்டினர். என்னைக் கண்ட அன்பர்கள் பலரும் தங்களை வெகுவாகப் புகழ்ந்தனர். நம் இயக்கத்திற்கு மாறுபட்டவர்கள் கூட நம் முயற்சி வெல்ல உளமார வாழ்த்துகின்றனர். தங்களின் வருகைக்கு நன்றி. தங்களுடன் ஓய்வு விடுதியிலும், தொடர் வண்டி நிலையத்திலும் உரையாடியது எனக்கு எழுந்த பல ஐயப்பாடுகளை நீக்கியது. 'புலம்பன்' நிலை குறித்துப் பாவாணர் தந்த விளக்கத்தைவிட தங்கள் விளக்கம் மெய்யுணர்வு தருவதாக இருந்தது.

— **த. கரிகாலன்**, கடையநல்லூர்.

0: 955: தமிழின முன்னேற்றமொன்றே மூழுமூச்சாய்ப் பேச்சாய் உரைவீச்சாய்க் கொண்ட ஒண்டமிழ்க் கொண்டலே !

சுவடி : 18, ஓலை : 10-11 இதழ்களில் தங்களது, 'என்னைப் பற்றி நானே கேள்விப்படுவது' எனும் தொடர் கட்டுரையினை முன்பே பன்முறை படித்தேனுயினும், அவற்றை மீண்டும் பன்னிப் பன்னிப் படித்தேன்; உளந் துடித்தேனில்லை. புறம்பேசித் திரியும் அவ் வயிற்றுப் பெருமான்களின் போக்கு இரக்கத்திற்குரியதாதலோடு, எண்ணியெண்ணி இறும்பூதெய்தற்குரியதுமாம். என்னே அவர்தம் இழிநிலை வினை !

தங்களது அறிவாற்றல், வினைசெயல் வகை, உரைத்திறம் முதலானவற்றைப் பல நிலைகளினும் அணுகி, இசுக்காட்லாந்து யாட்டு(!) ஒற்றர்களைப்போல் நுணுகி ஆய்ந்து அன்னுர் கண்டு பிடித்துவிட்டதாகக் கழறுபவை, தங்களிடம் கொண்ட புகழ்க் காய்ச்சலா லென்க. என்னை ? இவர்க்கு மட்டும் செல்லுமிடமெங்கும் இத்துணைச் சிறப்பா ? கூட்டமா ? இவரது உணர்வுசான்ற உரை மழையில் நனைய இப்படியொரு நாட்டமா ? இவ்வளவு ஒட்டமா? என்கின்ற உட்காய்ச்சலால் உளறுகிறுர்களேயன்றிப் பிறிதொன்ருலன்று; 'புலமிக்கவரைப் புலமை தெரிதல், புலமிக்கவர்க்கே புலனும்' என்பதற்கியையத் தங்களது தெளிந்த நல்லறிவு, வினைத்திறம், பழகும் பாங்கு முதலாய பிறவற்றை ஐயந்திரிபற அறிந்து கொள்ளவும் அறிவு வேண்டும். தங்களை ஓர் அரிய பல்கலைப் பனுவலெனலாம். ஒரு பனுவலை, உணர்வும் அறிவும் தோயப் பற்றேடு சுவைத்துப் படித்தல் எல்லார்க்கும் எளிதன்று. தெரு நாய்களின்... குரைப்புக்கஞ்சிப் பெருவழிப் பயணத்தை நிறுத்துதலுண்டோ ? எனவே, உள்ளத்தில் கறுப்பு வைத்த அவ்வுண்மை(!) நண்பர்கள் தங்களைப் புறந்தூற்றினும், தாங்கள் தூற்றன்மின்; தூர விடுமின்.! குணமென்னும் குன்றேறி நின்றுள்ள தங்களுக்கு வருங்காலம் இன்னுத எண்ணமுடையார்தம் மெய்க்கோலத்தைக் காட்டும். 'தூர இருந்தால் சேர உறவு' வறுங்கோட்டியையும் ஒரு சிறிதும் பொருட் படுத்தாது அருமைப்பாடுடைய, பெருமைக்குரிய கழக வினைப்பாடுகளைப் பொறுமையுடன் ஆற்றிவருக. தங்களுக்குத் துணையாக அரியதோர் உரறக்களமுண்டு. அது கண்டு, தென்மொழிக்கு நாளும் செய்க நல்ல தொண்டு. வாழிய தென்மொழி !

— **தென்மொழித்தம்பி, பெரு. தமிழ்வேந்தன்**, பவானி சாகர்.

0 : 956 : பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்குமுரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு என் அன்புநிறைந்த வணக்கங்கள். 26-9-82இல்

திருச்சியில் தங்களின் தமிழின முன்னேற்றப் பேருரையைக் கேட்டு, நானும் என் போன்ற தமிழ் நெஞ்சங்களும் அடைந்த கழிபேருவகை சொல்லில் அடங்காது! நான் பணியாற்றும் பள்ளியின் சூழல் காரணியமாகத் தங்களைத் தனித்துக் கண்டு பேசிடக் காலம் கிடைக்கவில்லை. தங்களின் தன்னேரில்லாத் தமிழ்ப் பணிக்கு, என்னாலியன்ற சிறு பங்கினை என்றும் ஆற்றுவேன். தங்களின் தமிழ்த்தொண்டன்.

— மு. சொக்கப்பன், திருப்பராய்த்துறை.

0 : 956 : தமிழ்த் தேயத்தின் தானைத் தலைவராம் பேரறிவு மிக்க பாவலரேறு ஐயா அவர்களுக்கு, நான் கடந்த ஓராண்டாகத் தான் தங்களுடைய தனித் தமிழ்த் தாளிகைகளான **தென்மொழி, தமிழ்ச்சிட்டு** போன்றவற்றைக் கோவைத் தமிழன்பர்கள் வழி பெற்றுப் படித்து வருகிறேன். தங்களின் தனித்தமிழ் இயக்கத்தை யும், ஆழ்கடலினும் ஆழ்ந்தகன்ற அறிவுடைமையையும் அறிந்து நெஞ்சுவந்து மகிழ்ந்தேன். தங்கள் அன்புத் திருமுகத்தைக் காண வேண்டுமென்று மூண்டெழுந்த என் உள்ளக்கிடக்கை கைக்கெட்டி யும் வாய்க்கொட்டாத கனியைப்போல ஆகிவிட்டது. தாங்கள் நீலமலை வந்திருந்தும், உங்கள் அன்பொழுகும் திருமுகத்தை காண வியலாமற்போன நிலைக்கு வருந்துகிறேன். நீலமலைக்குத் தாங்கள் வந்ததை நண்பர்வழி அறிந்த எனக்கு, 'மீண்டும் வருவேன் சில நாட்களில்' என்று தாங்கள் கூறிச் சென்றதாக அவர் கூறிய சொற்கள் கரும்பா யினித்தன. தாங்கள் எப்போது மீட்டும் நீலமலை வருவீர்களென்பதை அறிவிக்க வேண்டுகிறேன். தனித்தமிழ் இயக் கத்திற்கும், தென்மொழியின் வளர்ச்சிக்கும் என்னாலியன்ற தொண்டு புரிவேனென உறுதி மொழிகிறேன்.

— தோ. இலக்குவன், மஞ்சூர், நீலமலை மாவட்டம்.

0 : 956 : பேரன்புமிகு ஐயா, வணக்கம். தங்களின் ஒப்பற்ற பணியினை திரு. புலவர் தமிழ்வேந்தன் எழில் அவர்களின் வழியாக, அறியலானேன். இம்மாதம் வந்த தென்மொழி இலக்கிய இதழை யும் வாங்கிப்படித்தேன். இத்தனைக் காலமாகத் தங்களோடு தொடர்பு கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன். பொருளையே அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இக் காலச் சூழலில் தாங்கள் மட்டும் மொழி, இனம், நாடு எனும் இன்றியமையாத மூன்று பற்றுகளையும் மக்களிடையே பரப்புவதற்கு முப்பொழுதும் எப்பொழு தும் உழைத்து வருகின்ற, இம்மியேனும் தன்னலமற்ற, தங்களின் தூய உழைப்பிற்கும், தொண்டிற்கும் என் மனமார்ந்த வணக்கம். எனவே மொழி, இனம், நாடு இம்மூன்றும் தழைத்தோங்கிட தங்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அயராது உழைத்திட நானும் அணியமாக இருக்கிறேன் என்பதை இம் மடல் வழியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். திருமுதுகுன்றம் வட்டத்திற்குரிய பொறுப்பாளர்களுள் எப் பொறுப்பை அளித்தாலும் நான் ஏற்றுக் கொண்டு, முழுமூச்சுடன் தங்களுடன் ஒத்துழைப்பேன்.

— இரா. சிவஇறை, கருவேப்பிலங்குறிச்சி.